விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 13 சனிக்கிழமை (27.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

# சீரற்ற காலநிலையால் தெற்கில் பேரவலம்

## 91 பேர் பலி; 110 பேரை காணவில்லை; 5 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு) நாட்டின் தென்பகுதியில் நிலவி வரும் அதிக மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவுகளில் சிக்கி 91 பேர் பலியாகியுள்ளதுடன் 110 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும் குறித்த அனர்த்தத்தில் 5 இலட்சத்திற்கும் அதிக மானவர்கள் பாதிக்கப்பட்டும் உள்ளனர். (23-ம் பக்.)



## உடனடி உதவி; ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென் 24☛

## கிளியில் வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கி விடுவிப்பு



23☛

## துணைவேந்தர் நியமனத்தில் அரசியல் – விஜயகலா சாடல்


(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக வல்வெட்டித்துறை மண்ணைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டபோதிலும் சில அரசியல்வாதிகள் முட்டுக்கட்டை போட்டு அத ற்கு தடைவிதித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் கல்விமான்கள் பாதிக்கப்படக்கூடாது. இந்த மண்ணைச்சேர்ந்த ஒருவர் துணைவேந்தராக தெரிவுசெய்யப்பட்ட போதிலும் அவர் அந்தப் பதவிக்கு இறுதியில் தெரிவாகவில்லை.

சில அரசியல்வாதிகள் முட்டுக்கட்டை போட்டு இதனை நிராகரித்துள்ளனர். ஒரு சில அரசியல்வாதி 23☛

## பௌத்த இனவாதம் தலைதூக்கியுள்ளது!



### மங்கள குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சிங்கள பௌத்த வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்கியுள்ளதாக நிதியமைச்சரும், ஊடகத்துறை அமைச்சருமான 23☛

## ஊர்காவற்றுறை விபத்து தொடர்பில் 14 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியான் பாலக்காட்டு சந்தியில் இடம்பெற்ற விபத்தினால் ஏற்பட்ட வன்முறை சம்பவம் தொடர்பில் பதினாறு நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கடந்த வாரம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலக்காட்டு சந்தியில் தனியார் பேருந்து ஒன்றும் துவிச்சக்கரவ 23☛

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் இன்று மற்றும் நாளை நடைபெறவிருந்த சகல பரீட்சைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 24☛

## இன்று தொடக்கம் ரம்ழான் நோன்பு

(கொழும்பு)

புனித ரம்ழான் மாதத்திற்கான தலைப்பிறை நேற்று தென்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அதன்படி இலங்கை வாழ் முஸ்லிம்களின் நோன்பு இன்று தொடக்கம் ஆரம்பமாவதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. (11)

## விபத்தில் சிக்கிய ஹெலிகொப்டர்

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீட்பு 24☛

## இந்தியக் கப்பல் கொழும்பு விரைவு

(கொழும்பு)

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான நிவாரணப் பொருட்களுடன் கப்பல் ஒன்று இந்தியாவிலிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. 24☛

நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு தொடர்பான படங்கள் 4-ம் பக்கத்தில்

## தவறான சிந்தனையை மாற்றினால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்


### – முதல்வர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கு இடையில் காணப்படும் தவறான சிந்தனைகளை மாற்றினால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையே காணப்படும் வேற்றுமை உணர்வுகளும், சச்சரவுகளும் அரசியல்வாதிகளாலும் பிற்போக்கு சிந்தனையாளர்களாலும் விதைக்கப்பட்ட ஒரு நச்சு விதையெனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இருந்து பாக்கு 23☛



## சீரற்ற காலநிலையிலும் ஞானசார தேரருக்கு வலைவீசும் பொலிஸார்

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்வதற்கு சீரற்ற காலநிலையிலும் பொலிஸார் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றைய முன்தினம் நியமிக்கப்பட்ட நான்கு பொலிஸ்குழுக்களுமே இந்த தொடர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக சிறுபான்மை மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், பொது பல 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ரூ. 75 மில்லியன் செலவில்

# ஆழிக்குமரன் நீச்சல் தடாகம் நேற்று அடிக்கல் நாட்டல்

(கரணவாய்)

ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல்தடாக அடிக்கல் நாட்டு விழா நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையில் இடம்பெற்றது.

75 மில்லியன் ரூபாய் செலவில் அமைக் கப்படவுள்ள நீச்சல் தடாகத்துக்கு அடிக்கற் களை நிதி, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், குமார் ஆனந்தனின் மகன், பாரியார், வட மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுல ராஜா, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திசநாயக்க, வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகிய ஒன்பது பேரும் ஒரே நேரத் தில் அடிக்கற்களை வரிசையாக நின்று நாட்டி வைத்தனர்.

அதன்போது வல்வெட்டித்துறை மக்களி னால் வல்வெட்டித்துறை நகரில் பட்டாசுகள் கொளுத்தி பெரும் ஆரவாரம் இடம்பெற்றது.

இதையடுத்து நினைவு கல்லினை ஆனந்தனின் மகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வட மாகாண சபை உறுப்பினர்கள், பருத்தித்துறை பிர தேச செயலாளர் இ.த.ஜெயசீலன், வட மாகாண கல்வி, விளையாட்டுத் துறைகளின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டி ருந்தனர். (60)

## வடக்கு மாகாணம்

# தொண்டர் ஆசிரியர் நியமனம் நேர்முகத்தேர்வு ஜீன் 28,29,30

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்குரிய நியமனத்திற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் ஜீன் மாதம் 28,29,30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தாக வட மாகாண கல்வி அமைச்சின் செய லாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள பிரதேசங் களில் நீண்டகாலமாக தொண்டர்களாக பணியாற்றும் ஆசிரியர்களை நிரந்தரமாக்கு மாறு பல கோரிக்கைகளும் ஆர்ப்பாட்டங் களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. வட மாகாண கல்வி அமைச்சும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

குறித்த நியமனத்திற்கான அமைச் சரவை அனுமதி கிடைத்ததற்கு அமைய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர் பாக இறுதி முடிவுகளை எடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் கல்வி அமைச்சின் செயலாள ருடைய அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே மேற்குறித்த முடிவுகள் எடுக் கப்பட்டுள்ளது.

குறித்த நேர்முகத்தேர்வு 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளதுடன் மூன்று பேர் கொண்ட மூன்று குழுக்களின் தலைமை யில் நடைபெறவுள்ளது.

அதில் மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி, மாகாண கல்வி திணைக்கள அதிகாரி ஒருவர் மற்றும் மத்திய கல்வி அமைச்சில் இருந்து அதிகாரி ஒருவர் அந்த குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

குறித்த நேர் முகத் தேர் வில் கடந்த 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி 3 வருட சேவைக் காலத்தினை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தற்போதும் கடமை யில் உள்ளவர்களே முதற்கட்டமாக உள் வாங்கப்படவுள்ள னர்.

இவ் வாறான தகைமைகளை கொண்டவர்கள் பரி சீலிக்கப்பட்டு நேர் முகத் தேர் வுக்கு உள் வாங்கப் பட வுள்ளனர். அவர் களுக்கான கடிதங் கள் விரைவில் அனுப்பி வைக்கப் படவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் ஜீன் மாதம் நேர்முகத் தேர்வுகள் இடம் பெற்று ஜீலை மாதத்தில் நிய மனங்கள் வழங்கு வதற்கான ஏற் பாடுகள் நடைபெற வுள்ளன என அவர் மேலும் தெரிவித் தார். (9)


## காணி, வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நீளம் 120 அடி, அகலம் 120 அடிகளைக் கொண்டது. ஒன்பது அறைகளையும் நான்கு குளியல் அறை களையும் கொண்ட பெரிய நாற்சதுர வீடு இக்காணிக்குள் உண்டு. இக்காணியின் முன்பக்கமாக கிழக்கு முகம் பார்க்கக்கூடிய திருமண மண்டபம், Shoping Complex, 10 கடைகள் கட்டக்கூடிய இடவசதியும் உண்டு. அரைவாசியாக பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 361 1282 (C-8698)



## யா/மகாஜனக் கல்லூரி

**தெல்லிப்பழை**

**பழைய மாணவர் சங்கம்**

**(தாய்ச் சங்கம்)**

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் : 11.06.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : 9.30 a.m
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்

மேற்படி பொதுக் கூட்டத்தின் போது புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறுவதோடு புதிதாக அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் அன்றைய தினம் இணைந்து கொள்ளலாம்.

பிரேரணைகள் இருப்பின் **04.06.2017**இற்கு முன் செயலா ளரிடம் சமர்ப்பிக்கவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 638 4114** (C-8699) **செயலாளர்**


## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் தொடர் போராட்டத்தின் 100ஆவது நாளில்

# மாபெரும் சர்வமத பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களுடைய உறவினர்களின் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளில் மாபெரும் சர்வமத பிரார்த்தனைக்காக அனைத்து மாவட்டத்தில் இருந்தும் உறவுகள் அனை வரும் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஒன்றுகூடுமாறு காணாமல் ஆக் கப்பட்டவர்களுடைய உறவினர்கள் அழை ப்பு விடுத்துள்ளனர்.

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் தமக்கான நீதியை கோரி தொடர்ச்சியான போராட்டங் களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இது வரை அரசிடம் இருந்து உரிய பதில் வழங் கப்படவில்லை.

அந்த வகையில் காணாமல்போனவர் களுடைய உறவினர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி 100ஆவது நாளை எட்டவுள்ள நிலையில் குறித்த திகதியில் மாபெரும் சர்வமத பிரார் த்தனை ஒன்றை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளனர்.

இந்த சர்வமத பிரார்த்தனையின் மூலம் சர்வதேசத்துக்கு இப் பிரச்சினையை மீண் டும் மீண்டும் தெரியப்படுத்தி தீர்வினை பெற் றுத்தர கோரவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த மாபெரும் பிரார்த்தனையில் பொது மக்கள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், மாணவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு காணாமல் போனவர்களுடைய உறவினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (9)

# இலக்கத்தகடு நேற்று மீட்பு

காங்கேசன்துறையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இருந்த கிணற்றுக்கு அண்மையில், இராணுவத் தினரால் பொதுமகனிடம் இருந்து வலுக் கட்டாயமாக பறித்து செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு ஒன்று நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் அண்மையில் விடு விக்கப்பட்ட காங்கேசன்துறை வடக்கு குரு வீதி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சொந்த மான கிணறு ஒன்றில் இருந்து பழைய மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் மோட் டார் சைக்கிள் பாகங்கள் சிலவும் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

அந்த பகுதியில் இருந்து சற்று தொலைவில் மோட்டார்சைக்கிள் ஒன்றின் இலக்கத்தகடு (NP MA 1888) ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அந்த இலக்கத்தகடுக்குரிய உரிமையாளர் தற்போது இணுவில் பகுதியில் வசித்து வரு கிறார்.

அவரிடம் சென்று விசாரித்த போது குறி த்த மோட்டார் சைக்கிளை கடந்த 2006ஆம் ஆண்டளவில் வேறு ஒரு நபருக்கு விற்று விட்டதாக தெரிவித்ததுடன் அந்த நபருடைய விபரங்களையும் தெரிவித்திருந்தார். அவர் குறிப்பிட்ட விபரங்களை வைத்து மோட்டார் சைக்கிளை வாங்கிய நபரை தேடி அவரிடம் விபரங்களை கேட்ட போது,

கடந்த 2007ஆம் ஆண்டில் இராணுவத் தினர் தன்னிடம் இருந்து வலுக்கட்டாயமாக அந்த மோட்டார் சைக்கிளை பறித்து சென் றனர் என தெரிவித்தார். (9)


## தேவை

நவாலியில் இயங்கும் N.**சீலன் பேக்ஹேசிற்கு** பேக்கரி வேலை தெரிந்தவர்களும் பழகவிரும்பு பவர்களும் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: (C-8695) **(இருபாலாரும்)**
077 325 3610



## விற்பனைக்கு

பாவித்த சீற், பனை மரங்கள், முட்டைக் கோழிகள் - பிறிமா வெள்ளை உடன் விற்பனைக்கு உண்டு. (C-8700)

077 436 6704



# மரண அறிவித்தல்

## திருமதி சுகிர்தம் மகேசன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம்)**



நாயன்மார்கட்டு, நல்லூரரை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தம் மகேசன் நேற்று (26.05.2017) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி புரம் - அன்னம்மா தம்பதிகளின் அன் புப் புதல்வியும் காலஞ்சென்ற கண பதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதி களின் அன்பு மருமகளும் மகேசனின் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப் பாளர் - பண்டத்தரிப்பு கோட்டம்), அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான ஜெபக்கொழுந்து, இராசமணி, தவம், பவளம், ஜோய்ஸ் தையல் முத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.திருமகள் (பல் வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.நாமகள் (சித்த மருத்துவம் - நீர்வேலி உப அலுவலகம்), அருட்செல்வன் (பரிசாதகர் - முல்லைத்தீவு ஆயுள்வேத வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.இராஜசேகரன் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), காண்டீபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோரளைப்பற்று), இன்பரோஜா (செல்வி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தாக்சாயினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரகலாதன் (யாழ்.இந்துக் கல்லூரி), கேதாரணி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), விதுசனன் (யாழ்.இந்துக் கல்லூரி), கேசவி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), காருணிகா, கேசாயினி ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.6, இராணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (இ)

தகவல் -
குடும்பத்தினர்
071 847 4756

# மீட்பு நடவடிக்கைக்காக முப்படையும் களத்தில்



அசாதாரண காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மீட்பு நடவடிக்கைக்காக முப்படையினரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் நிவாரண நடவடிக்கைகளுக்காக நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் கூறியுள்ளது.

இது தவிர காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் நிவாரணப் பணிகளுக்காக கடற்படையினரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நெலுவ, மொரவக்க, கம்புறுபிட்டிய போன்ற பிரதேசங்களில் 04 படகுகள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மாத்தறை மாவட்டத்திற்கு 01 படகும், களுத்துறை, கலவானை பிரதேசங்களுக்கு 02 படகுகளும் அனுப்பப்பட்டுள்ளதாக கடற்படை கூறியுள்ளது.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கையில் விமானப் படையினரின் இரண்டு ஹெலிகொப்டர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பெல் 212 மற்றும் எம்.ஐ. 17 வகை ஹெலிகொப்டர்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக விமானப்படை கூறியுள்ளது. (இ-7)

# மூதூர் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்கு

## பொலிஸில் முறைப்பாடு

மூதூர் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது.

திருகோணமலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் மூதூர் கெவ்லியா கடற்பகுதியில் மூதூர்-7 தாயிப் நகரைச் சேர்ந்த 1 மீனவரும் மூதூர்-1 அக்கரைச்சேனையைச் சேர்ந்த 8 மீனவர்களும் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இதன்பொது அங்கு வந்த கடற்படையினர் தம்மையும் படகுகளையும் தாக்கியதாகவும், அதில் இரு மீனவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் நான்கு மீனவர்கள் மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும் 3 மீனவர்களையும் அவர்களின் படகையும், அதில் இருந்த 900 கிலோ மீனையும் கைப்பற்றிய கடற்படையினர் தடைசெய்யப்பட்ட இடத்தில் மீன்பிடியில் ஈடுபட்டதாக கூறி அவர்களை திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் துறைமுகப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# இடர் அனர்த்த நிலைமையை தொடர்ந்து முக்கிய முடிபுகள்

(கொழும்பு)

கடும் மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு 2003ம் ஆண்டிலும் பார்க்க மிக மோசமான பாதிப்பாகும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்றுக் காலை அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

காலி நெலுவ நகரத்தில் அதி கூடிய மின்னழுத்த கட்டமைப்பிற்கு மேலாக நீர் மட்டம் அதிகரித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

வெள்ளத்தினால் சிக்கியிருக்கும் பொதுமக்களை மீட்கும் பணியில் முப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தம்மிடம் இருக்கும் மீன்பிடி வள்ளங்களை அருகாமையிலுள்ள பொலிஸ் அலலது பாதுகாப்பு தலைமையகத்திடம் ஒப்படைத்து மக்களை மீட்டெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் கடற்றொழில் சமூகத்திடம் இதன் போது கேட்டுக் கொண்டார்.

இந்த மீன்பிடி வள்ளங்களின் சேவையை பெற்றுக் கொள்வதற்காக 2003ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வகையில் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நடைபெறவிருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தொடர்பான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.


இந்த அனர்த்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இடர் அனர்த்தத்தின் காரணமாக அரசாங்க சேவையாளர்களின் விடுமுறைகள் இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு இது ஏற்புடையது ஆகாது என்றும் அமைச்சர் கூறினார்.

அனைத்து அரச ஊழியர்களும் இடர் நிவாரண சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆரம்பமான அரசாங்க அதிபர்களின் மகாநாடு ஒருநாள் மட்டும் வரையறுக்கப்பட்டது. அனைவரும் இடர் முகாமை சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (இ-7)

# நிவாரண நடவடிக்கைகளுக்கு பிரதமர் ரணில் நிதி ஒதுக்கீடு




நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் ரணில் உரிய அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிவாரணம் வழங்குவதற்காக எந்த தடையும் இன்றி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோத கட்டடங்களை உடன் அகற்றுமாறு சம்பிக்க உத்தரவு




நீர் ஓடைகள் மற்றும் நீர் வடிகாலமைப்புக்கு இடைஞ்சலாக காணப்படும் கட்டடங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடும் மழை காரணமாக களனி கங்கையில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் கொலன்னாவை, கடுவலை, வத்தளை மற்றும் களனி பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உரிய நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு அறிவிப்பு செய்த பின்னர் கட்டடங்களை அகற்றும் பணிகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுமக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மண்மேடு சரிந்து விழுந்து மாணவர் இருவர் மரணம்

அவிசாவளை, வெலன்கல பிரதேசத்தில் நேற்றுக் காலை வீடொன்றின் மீது, மண்மேடு சரிந்து விழுந்ததில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். 14 வயதுடைய மாணவி மற்றும் 10 வயது மாணவன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். (இ-7)

# வெள்ள நீரில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

வரக்கொட - பெலிஅத்த பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 11 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சிறுவனை பிரதேசவாசிகள் காப்பாற்றி தங்கல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் குறித்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான். (இ-7)

# சீரற்ற காலநிலையால் பாடசாலைகள் மூடல்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் வெப்பமான காலநிலை நிலவிவந்த நிலையில் தற்போது பெரும்பாலான இடங்களில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. பல இடங்களிலும் வெள்ள அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் சகல பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தனை அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையம் அறிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





# வெள்ளத்தில் தத்தளிக்கிறது தெற்கு


























# வெள்ளக்காடாக காட்சியளிக்கும் தெஹியோவிட்ட




(கொழும்பு)

தெஹியோவிட்ட பகுதியில் பெய்துவரும் கடும் மழையின் காரணமாக ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையின்காரணமாக தெஹியோவிட்ட நகரம் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது. சுமார் 8 அடி உயரம் வரை நீர் நிரம்பியுள்ளது.


இதேவேளை தெஹியோவிட்ட தேசிய பாடசாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நீர் நிரம்பியுள்ளதுடன், ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியிலும் வெள்ளநீர் நிரம்பியுள்ளது.

இதனால் ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் பயணிக்கும் பேருந்துகள் மாற்று வழிகளை பயன்படுத்தி வருவதுடன், சில பேருந்துகள் மீண்டும் ஹற்றன் நோக்கி புறப்பட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் பயணிக்கும் சிறிய வாகனங்கள் தெஹியோவிட்ட பகுதியிலுள்ள மாற்றுவழியொன்றினூடாக பயணித்தன.

இதேவேளை தெய்யோவிட்ட நகரத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# ஆறுகளில் நீர் மட்டம் உயர்வு பொது மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்



(கொழும்பு)

களனி கங்கை, களு கங்கை, கிங் கங்கை மற்றும் வளவகங்கை ஆகியவற்றில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் அப்பகுதியில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நிலவி வரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேருவளை இளைஞர்கள் மீட்புப் பணியில்





(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் கடும் மழையினால் நாட்டின்பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சில இடங்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ள அதே வேளையில் ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். இன்னும் ஏராளமானோர் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர முடியாமல் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்கும் நோக்கில் அரச படைகள் களமிறங்கியுள்ள அதே வேளையில் பேருவளை மருதானை இளைஞர்களும் வழமைபோன்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக மீனவ படகுகளை பேருவளையிலிருந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு சென்றுள்ளனர். தமது உயிரையும் துச்சமெனக்கருதி பேருவளை இளைஞர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வியாங்கல்லை பெலாந்தை வெலிப்பன்னை இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வேலைநிறுத்தப் போராட்டம்

ரயில் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியாலய வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளன.

சம்பள நிர்ணயத்தை மீள்நிர்மாணம் செய்தல் மற்றும் ஓய்வூதியம் பெறும் வயதெல்லையை 63 வயது வரை அதிகரிக்குமாறு கோரியே ரயில் தொழிற்சங்கங்கள் மேற்படி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன.

ரயில் தொழிற்சங்கங்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லால் ஆரியரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 5ஆம் திகதி சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் இணைந்து ரயில் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்திருந்தன.

இதன் காரணமாக நாட்டில் ரயில் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது. இந்நிலையில், மீண்டும் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி நள்ளிரவு முதல் 24 மணிநேர போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக ரயில் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளமை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். (இ-7)

# மீட்புப் பணியில் ஈடுபட்ட ஹெலிகொப்டர் விபத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் மீட்புப் பணிக்கு சென்ற ஹெலிகொப்டர் ஒன்று காலி, நெழுவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி உடைந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தற்போது கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களை மீட்பதற்காக பெல் 212 மற்றும் எம்.ஐ - 17 ஹெலிகொப்டர்கள் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

27.05.2017

(வைகாசி 13, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

துதியை முன்னிரவு 9.19 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 9.46 மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | சூரி | சந் செவ் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>காலை 10.34 மணிக்கு<br>மிது-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், பகையொன்று நட்பாகலாம், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள்.

**இடபம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், போசன சுகமுண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கலாம்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், பிறர் உதவியுண்டு, காலைப் பொழுதில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர் பயணத்தில் ஆதாயமுண்டு.

**மகரம்** கனிவாகப் பேசி காரியத்தை சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வ புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பயணங்கள் கைகூடும்.


# மண்-இரும்பு பிரித்தெடுப்பு மாணவனுக்குப் பதக்கம்



யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 8 இல் கல்விகற்கும்சண்முகரட்ணம் கஜானன் என்ற மாணவன் இலங்கை புத்தாக்குநர் ஆணைக் குழுவால் நடத்தப்பட்ட தேசிய மட்ட புத்தாக்கப் போட்டி 2016 இல் தங்கப் பதக்கத்தைப்பெற்றுக் கொண்டதுடன் அண்மையில் மலேசியாவின் கோலாலம்பூரில் 11.05.2017 -13.05.2017 வரை நடைபெற்ற 28 ஆவது சர்வதேச புத்தாக்க தொழில்நுட்ப கண்காட்சி 2017 இல் வெள்ளிப்பதக்கத்தையும்பெற்றுக் கொண்டார். (இ-3)

# தரம் -5 மாணவர்களுக்கான செயலட்டைப் புத்தகம்






நெடுந்தீவில் தரம் 1-5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயலட்டைப் புத்தகத்தை வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர்களின் ஆலோசனைக்கேற்ப தயாரித்தனர். இது மீத்திறன் மாணவருக்கு மட்டுமல்லாது மெல்லக் கற்போருக்கும் பயனளிக்கும் முகமாகத் தயாரிக்கப்பட்டது. இப் புத்தகம் வழங்கும் வைபவம் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி, அதிபர்கள், தரம் -5 ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள் முன்னிலையில் தரம் 1-5 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மாணவர்கள் தொகை : 51 (நெடுந்தீவு) இப்புத்தகம் வேலணை, காரைநகர், ஊர்காவற்றுறைக் கோட்டங்களுக்கும் வழங்கப்பட்டன.

இவ்விழாவுடன் இணைந்து பிரதேச செயலக தடகளப் போட்டியின் மாவட்ட மட்டத்தில் ஜோ.திருட்சிகா என்பவர் விளையாட்டுக்களில் முதலாமிடங்களைப் பெற்றமைக்கு நெடுந்தீவு ஒன்றியத்தால் (பிரித்தானியா) அன்பளிப்புப் பணமும் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டது.(இ

# விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு புதிய வகுப்பறை



(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் திருமதி கௌரி பொன்னையா சுமார் 1.5மில்லியன் ரூபா பெறுமதியில் புதிய வகுப்பறை தொகுதியை கட்டி அன்பளிப்பு செய்துள்ளார்.

இக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் ஜ.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி.கௌரி பொன்னையா கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார். (இ-89)

# வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் சர்வதேச புகைப்பொருள் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு, வலிகாமம் கல்வி வலயத்தில் 9ஏ சித்தி பெற்றுச் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

மேற்படி சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பிஎஸ் ஜெபரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி, விக்டோரியா கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மகாஜனா கல்லூரி, யூனியன் கல்லூரி மற்றும் வயாவிளான் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களே மேற்படி நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமானது, 1972 ஆம் ஆண்டு முதல் போதைப் பொருள் மற்றும் புகைப் பொருளுக்கு எதிராக வட மாகாணத்தில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. அதேநேரம், கல்வியில் சாதனை படைத்து வரும் மாணவர்களையும் கௌரவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சமகால சர்வதேச விவாதங்கள் விசேட கலந்துரையாடல் களம்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "சொந்த ஒரு வயலுக்காக தென் ஆசியாவில் பால் நிலையும் நில உரிமையும்" என்ற தலைப்பில் சமகால சர்வதேச விவாதங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் களமானது இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில் அறிமுக உரையினை நியந்தினி கதிர்காமர் வழங்கவுள்ளார்.

பீனா அகர்வால் அவர்களால் எழுதப்பட்ட 'சொந்த ஒரு வயலுக்காக' தென் ஆசியாவில் பால்நிலையும் நில உரிமையும் என்ற நூலில் பெண்களுக்கும் நில சொத்துரிமைக்கும் உள்ள தொடர்பை பற்றி ஆராயப்படுகின்றது. அவர் பெண்களின் நிலைமையை பாதிக்கும் மிக முக்கியமான பொருளாதாரக் காரணி, சொத்தின் மீது கட்டளையிடும் பாலின இடைவெளி என்று வாதிடுகின்றார்.

இந்தப் புத்தகத்தின் சாராம்சம் தமிழிலே முதல் நாற்பது நிமிடங்களுக்குள் வழங்கப்படும். அதனை அடுத்துள்ள 90 நிமிடங்களுக்கு கிராமிய பொருளாதாரம், நிலவுடைமை மற்றும் பெண்களுக்கு உள்ள தொடர்பை பற்றியும், நிலம் சார்ந்த போராட்டங்கள் பற்றியும் ஒரு கலந்துரையாடல் இடம்பெறும். (இ-3)




# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலய மஹோற்சவ விஞ்ஞாகனம் நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 06.06.2017 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 7.6.2017 புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

# மானிப்பாய் சந்தைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மானிப்பாயில் நிர்மாணிக்கப்படவுள்ள மரக்கறிச் சந்தை மற்றும் கடைத் தொகுதிக்கான பூர்வாங்க அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் , சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீளகுடியேற்றம் மற்றும் இந்துமத, அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சிறப்பு விருந்தினர்களாக் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-82)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரியின் கலையரங்கில் கல்லூரியின் விரிவுரையாளர் மானியூர் ரட்ணேஸின் "தூளி" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.



குமார் ஆனந்தன் நீச்சல் தடாகத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றைய தினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. 75 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள இந்த நீச்சல் தடாகத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ், சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-சாளின், மகாலிங்கம்)

# தனியார் வங்கியில் நேற்றுக் கொள்ளை

கம்பஹா - மீரிகமையில் உள்ள தனியார் வங்கியில் நேற்றுக் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் கொள்ளையிடப்பட்ட பணத்தின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது. மேலும்கொள்ளையிட்ட பின்னர் அவர்கள் இருவரும் தப்பிச் சென்று விட்டனர். (இ-7)


**டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

(சி.8589)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088


# திருமறைக் கலாமன்றத்தின் பல்லின சிறார்கள் வழங்கும் வண்ணப் பொழுது கலை நிகழ்வு இன்று இளவாலையில்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தில் கடந்த ஒரு வருட காலமாக களிமண் சிற்பப் பயிற்சி நெறியை மேற்கொண்ட மாணவர்களின் சிற்பக் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் இம்மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

இதேவேளை 'சிறுவர்கள் சமூக ஒருமைப்பாட்டின் முகவர்களாகிறார்கள்' என்னும் கருப்பொருளில் திருமறைக் கலாமன்றம் கடந்த பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்ற செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக திருமறைக் கலாமன்றத்தின் அனைத்து பிராந்திய மன்றங்களையும் சேர்ந்த பல்லின சிறார்கள் வழங்கும் கலை நிகழ்வுகளின் சங்கமம் 'வண்ணப்பொழுது' என்னும் பெயரில் இன்று சனிக்கிழமை (27.05.2017) மாலை 6 மணிக்கு கல்லூரி வீதி, இளவாலையில் அமைந்துள்ள இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலைக் களரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்லின சிறுவர்களின் நாடகம், நடனங்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-3)


**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558

(C-8520)


# நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அரச பணியாளர்களுக்கான விடுமுறை இரத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக அரச பணிகளில் ஈடுபடுவோருக்கான விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, அனர்த்த நிலை ஏற்பட்டுள்ள பிரதேசங்களின் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அரச பணியாளர்களின் விடுமுறைகளே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் உடனடியாக பணியிடத்திற்கு திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச அதிகாரியொருவர் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டிருப்பின் அல்லது பணிக்கு வருகை தர முடியாத நிலை காணப்படின், இரண்டாவது அதிகாரி அல்லது மாற்று அதிகாரி உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:15சூரி செவ் 5 ல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:HNDE, BSc/ QSஅபுதாபி<br>தொ.இ: B/6323 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 48 செவ் 4 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6239 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பொறியியளாளர் பிரான்ஸ்<br>தொ.இ: B/6177 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 30 செவ் 7<br>ல்உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர் டென்மார்க்<br>தொ.இ: G/6240 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 19 சூரிசெவ் 11 ல்<br>தகைமை/தொழில்: A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/6179 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 27<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6242 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 49 செவ் 12 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்:தொழில்நுட்பவியளாளர<br>தொ.இ: B/6280 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 17<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6244 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## சங்கீதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வலிகாமம் வலய பாடசாலைகளில் தரம் 11இல் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30-12.30 மணி வரை யா/ இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-105)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுற்பகல்10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமைகாலை 8.30மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 9 ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும்நடைபெறவுள்ளன.

◆◆◆◆◆◆◆

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம்29ஆம்திகதிதிங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஜூன் மாதம் 8 ஆம் திகதிவியாழக்கிழமைமுற்பகல் 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10மணிக்குதீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-7)

# மூத்தோர் கௌரவிப்பும் நூல் வெளியீடும் 4ஆம் திகதி

சுக வாழ்க்கைப் பேரவையின் மூத்தோர் கௌரவிப்பும் நூல் வெளியீடும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு இணுவில் கந்தசுவாமிகோவிலடியில்அமைந்துள்ள இணுவில் அறிவாலயத்தில் இடம் பெறவுள்ளது. சுகவாழ்க்கைப் பேரவையின் தலைவர்கலாபூஷணம்,சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். (இ-3)

# 10 தேர்தல் தொகுதிகளுக்கான அமைப்பாளர்கள் விரைவில்

## ஐ.தே.க.பொதுச் செயலர் அறிவிப்பு




(கொழும்பு)


10 தேர்தல் தொகுதிகளுக்கான அமைப்பாளர்களை நியமிக்கும் பணிகளை ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக பத்தேகம மற்றும் பஸ்ஸர ஆகிய தேர்தல் தொகுதிகளுக்கான அமைப்பாளர்களை நியமித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வருடத்தில் 109 புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கு மாகாணத்திலுள்ள முக்கிய ஐந்து வைத்தியசாலைகள் புனரமைக்கப்படும்

## சுகாதார அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



நெதர்லாந்து அரசினது 9ஆயிரத்து 400 மில்லியன் ரூபாவும் அரசின் 4 ஆயிரத்து 600 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 14 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாணத்தில் உள்ள 05 மாவட்டங்களிலும் 05 முக்கிய வைத்தியசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்றவுள்ளதாக வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெதர்லாந்து அரசினதும் மற்றும் இலங்கை அரசினதும் கூட்டு நிதியுதவியுடன் வடக்கு மாகாண சபையின் கீழுள்ள 5 முக்கிய வைத்தியசாலைகள் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

இதற்கான மத்திய சுகாதார அமைச்சினது அனுமதி அமைச்சரவை ஒப்புதலுடன் தற்போது திறைசேரியின் அனுமதியும் கிடைத்துள்ளது.

எனவே விரைவில் இந்த வேலைத் திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு செய்து வழங்கப்படவுள்ளது. இதற்கமைய, முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் ஆதார வைத்தி யசாலை ஆயிரத்து 600 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் முழுமையாக புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து 200 ரூபா நிதி ஒதுக்கீட்டில் தாய் - சேய் பராமரிப்பு சிகிச்சைக் கூடங்கள் அமைக்கப்பட்டுவுள்ளது.

இதேபோன்று, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் இதர வேலைகளுக்காக 2ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நெஞ்சு, காது, மூக்கு, தொண்டை ஆகிய நோய்களுக்கான சிகிச்சைப் பிரிவுகள் நவீன வசதிகளுடன் அமைப்பதற்காக 2ஆயிரம் மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் கூடிய விசேட சத்திர சிகிச்சைக்கூடம் ஒன்று சுமார் ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இந்த திட்டங்களுடன், மேலும் சில சிறு இதர வேலைத்திட்டங்கள் அமைப்பதற்கான பூர்வாங்க அனுமதிகள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-281)

# வன்னிவிளான் குளம் அம்மன் ஆலய பொங்கல் விழா முன்னாயத்த கூட்டம்

(மல்லாவி )

வரலாற்றுச் சிறப்பு மிக்க வன்னி விளான்குளம் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, விழா தொடர்பான முன்னாயத்த ஒழுங்கமைப்புக் கூட்டம் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் பொ. பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த ஒழுங்கமைப்புக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தின் போது, துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் றமேஸ், மல்லாவி, மாங்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர், மல்லாவி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, மல்லாவி, பாண்டியன் குளம் ஆகிய பிரதேசங்களுக்கான பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வன்னி விளான்குளம் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




# சூரியசக்தி கலப்பு மின்னுற்பத்திப்பேட்டை பூநகரியில் நிர்மாணிப்பதற்கு அனுமதி

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி பிரதேசத்தில் 240 மெகாவோட் கொள்ளளவைக் கொண்ட காற்று சக்தி மற்றும் 800 மெகாவோட்கொள்ளளவைக்கொண்ட சூரியசக்தி கலப்பு மின்னுற்பத்திப்பேட்டை நிலையத்தை நிர்மாணித்தலுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பயன்படுத்தி குறிப்பிடத்தக்க அளவு மின் சக்தியைப் பெற்று அதனை தேசிய மின்சார அமைப்பில் இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய காற்று சக்தி மற்றும் சூரியசக்தி ஆகியவை மூலம் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உகந்த பிரதேசமாக வடக்கு மாகாணத்தில் உள்ள பூநகரி பிரதேசமானது இலங்கை நிலைபேறுதகு சக்தி வள அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ளது. இதன டிப்படையில் 240 மெகாவோட் கொள்ளளவைக்கொண்ட காற்று சக்தி மற்றும் 800 மெகாவோட் கொள்ளளவைக் கொண்ட சூரியசக்தி மின் உற்பத்தி நிலையங்களைக் கொண்ட கலப்பு மின்னுற்பத்திப்பேட்டை பூநகரி பிரதேசத்தில் நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தை 3 கட்டங்களாக செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (2-5-15)

# கிளிநொச்சி இராணுவத்தினரின் புதிய கண்டுபிடிப்பு கண்காட்சி



கிளிநொச்சி இராணுவத்தினரால் புதிதாக கண்டுப்பிடிக்கப்பட்ட உபகரணங்களின் மற்றும் கருவிகளின் கண்காட்சி- 2017 இடம்பெற்றுள்ளது.

இரணைமடு தாமரைத் தடாகம் மண்டபத்தில் கிளிநொச்சி பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் 2017 ஆம் ஆண்டு படையினரால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சாதனங்கள் மற்றும் கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டு அவை தொடர்பில் விளக்கங்களும் வழங்கப்பட்டன. புதிய தொழில் நுட்பத்துடன் பெருமளவுக்கு கழிவுப்பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு இலகுவாக வேலைகளை செய்யக் கூடிய பல புதிய கருவிகள் காட் சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதனை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள், படையினர உள்ளிட்ட பலர் பார்வையிட்டு வருகின்றனர். (2-5-312)

# எங்கள் மண்ணில் எவ்வித குறையுமின்றி வாழ்ந்தோம்

## இரணைதீவு மக்களின் போராட்டம் தொடர்கின்றது

எந்தவிதமான நோய் நொடியுமின்றி நிம்மதியாக வாழ்ந்த எங்கள் மண்ணில் மீண்டும் சென்று நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்தித்தாருங்கள் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர். இரணைதீவு மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 26 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக கடல் வளத்தைக்கொண்டதும் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பகுதியாகவும் காணப்படும் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இரணைதீவுப் பகுதியில் கடந்த 1992 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள் யுத்தம் நிறைவு பெற்று எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அவர்களது சொந்த நிலத்தில் மீள்குடியேறவோ அல்லது அங்கு சென்று தொழில் செய்வதற்கோ இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் தற்போது முழங்காவில் இரணைமாதா நகரில் தங்கியுள்ள இரணைதீவு மக்கள் தங்களை தமது சொந்த இடத்தில் மீள்குடியேற அனுமதிக்கக்கோரி கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் 26 ஆவது நாளான நேற்றும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எங்கள் மண்ணில் நாங்கள் இருப்போமாக இருந்தால் சீமாட்டியாக இருப்போம், இப்போது பணப் புழக்கமின்றி லொல்லொணா கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றோம். எங்களுக்கு எங்கள் மண்ணில் இருந்த சுகம் இல்லை.

இப்போது வருத்தங்களால் துன்பப்படுகின்றோம். நாங்கள் எந்தக் குறையுமின்றி வாழ்ந்தோம். தொழில் வளங்கள் எவ்வளவோ இருந்தது. செல்வம் செழிக்கும் எங்கள் மண்ணை எங்களிடம் தாருங்கள் என தெரிவித்துள்ளனர். (2-5-111)

# குடிநீர் விநியோகத்திட்டம் இன்று அக்கராயனில் ஆரம்பிக்கப்படும்

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் குடிநீர் விநியோகத் திட்டம் இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகத் திட்டத்தொகுதி முற்பகல் 11.30 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்படவு ள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. ஸ்ரீதரன், வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வை.தவநாதன், ப.அரியரத்தினம், து.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு வன்னேரிகுளத்தில் அமையப்பெற்றுள்ள சுற்றுலா மையமும் திறந்து வைக்கப்படவுள்ளது. சுற்றுலா மையத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார். (2-5-272)

# முல்லையில் உறவுகளின் போராட்டத்திற்கு இளைஞர், யுவதிகள் ஆதரவு வழங்கினர்

முல்லைத்தீவு மாவட்டத்தில்இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்புப்போராட்டம் 80 ஆவது நாளாகவும் தீர்வு எதும் கிடைக்காத நிலையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நேற்றைய போராட்டத்தின் போது பிரதேச மட்டத்திலான இளைஞர்கள், யுவதிகள் அடங்கிய



குழுவினர்வருகைதந்து போராட்டத்தில்ஈடுபட்டுள்ளஉறவுகளுடன் கலந்துரையாடி ஆற்றுதல் படுத்தியதுடன் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட் டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-281-15)

# 5 இலட்சத்து 2 ஆயிரத்து 574 குடும்பங்கள் வரட்சியால் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் நிலவி வரும் வரட்சி காரணமாக 14 மாவட்டங்களில் 5 இலட்சத்து 2 ஆயிரத்து 574 குடும்பங்களைச்சேர்ந்த 17 இலட்சத்து 50 ஆயிரத்து 575 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களும் கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் தொடர்ச்சியாக மாவட்ட ரீதியாக சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் உலருணவுப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த உதவித் திட்டங்களை அந்தந்த மாவட்ட செயலாளர்களின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அறிவித்துள்ளது.

இந் நிலையில், வடக்கு மாகாணத்திற்குட்பட்ட வவுனியா மாவட்டத்தில் 14 ஆயிரத்து 603 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 495 அங்கத்தவர்களும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 576 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 469 அங்கத்தவர்களும்,

மன்னார் மாவட்டத்தில் 20 ஆயிரத்து 928 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 870 அங்கத்தவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 21 ஆயிரத்து 294 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 844 அங்கத்தவர்களும் யாழ்.மாவட்டத்தில்31 ஆயிரத்து 284 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 51 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 685 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 10 ஆயிரத்து 703 அங்கத்தவர்கள் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)




# முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி அதிகரிப்பு

## கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில், சட்டவிரோத மீன்பிடி அதிகரித்துள்ளதால் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் ஜனாதிபதி தொடக்கம், அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும், முன்னெடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடலிலே வெளிச்சம் போட்டு மீன்பிடிக்கக் கூடாது என்பது சட்டம். எனினும் முல்லைத்தீவு கடற்பரப்பில் இரவு நேரங்களில் திருவிழா போன்று சட்டவிரோத மீன்பிடி இடம்பெற்று வருகின்றது.

அதனை தடுப்பதற்கு அதிகாரிகள் தவறி வருவதாகவும் அந்தோனிப்பிள்ளை மரியராசா குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த தவறும் பட்சத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும். முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (2-5-281)

### காணாமல் போனோர் தொடர்பில்

# தகவல்களைப் பெறமுடியாத காரணத்தினால் அனுப்பிய விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## முல்லை. மாவட்ட செயலகம் தகவல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இன்றுடன் 80 ஆவது நாளாக தொடர்கின்றது.

இந்நிலையில் காணாமல்போனோர்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தமது உறவுகளின் தகவல்களைப் பெற விண்ணப்பித்தனர்.

24.04.2017 மற்றும் 09.05.2017 ஆகிய இரண்டு தினங்களில் சுமார் 227 விண்ணப்பங்கள் மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

இந்நிலையில் இந்த விண்ணப்பதாரர்களுக்கு பதில் கடிதங்கள் மாவட்ட செயலகத்தால் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இக் கடிதத்தில் தங்களால் தகவல் பெறுவதற்கு வழங்கிய விண்ணப்ப படிவமானது முல்லைத்தீவு மாவட்ட செயலாளரால் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்டது.

தங்களின் விண்ணப்பம் தொடர்பான தகவல்களை பெறமுடியாத காரணத்தால் தங்களின் தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல் அறியும் சட்டம் 31(1)இன் பிரகாரம் மேன் முறையீடு ஒன்றினை 14 நாட்களுக்குள் செய்ய முடியுமெனவும் ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் அறியத்தந்துள்ளார் என மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு ஜனாதிபதி செயலகம் இவ்வாறு பதிலளித்தால் தாம் எங்கு போவது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.(2-5-281)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 283 பேர் பார்வையிழந்த நிலையில் வாழ்கின்றனர்

## செயலகத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்கமுடியும்

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 892 மாற்றுத் திறனாளிகள் பல்வேறு ரீதியான பாதிப்புக்களை எதிர் கொண்டு வாழ்ந்து வரும் நிலையில், இவர்களில் 283 பேர் கண்பார்வை இழந்த நிலையில் வாழ்ந்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மொத்தமாக 283, பேர் கண்பார்வை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

தமது ஒரு கண்ணை இழந்த நிலையில் 240, பேரும், இரண்டு கண்களையும் இழந்த நிலையில் 43 பேரும் உள்ளனர்.

இவர்களில், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் ஒரு கண்னை இழந்த நிலையில்49 பேரும், இரண்டு கண்களையும் இழந்த நிலையில் 12 பேருமாக மொத்தம் 61 பேர் உள்ளனர்.

பூநகரி பிரதேச செயலக பிரிவில் 40, பேர் தமது ஒரு கண்ணை இழந்த நிலையிலும், இரண்டு கண்களை இழந்த நிலையில் 13 பேருமாக மொத்தம் 53 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தமது ஒரு கண்ணை இந்த நிலையில் 42 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் 108 பேர் தமது ஒரு கண்ணை இழந்த நிலையிலும், 18 பேர் தமது இரண்டு கண்களையும் இழந்த நிலையிலுமாக மொத் தம் 126 பேரும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த பார்வை இழந்துள்ள மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் வகையில் நல்லின ஆடுகள், நல்லின பசு மாடுகள் உட்பட சுயதொழில் உதவிகளை வழங்கி உதவ விரும்புவோர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன்தொடர்கொண்டு தகவல்களை பெற்று பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமே நேரடியாக உதவித் திட்டங்களை கையளிக்க முடியும் என மாவட்டச் செயலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் 21 மில். நிதியில் விடுதிகள் திறப்பு





(மன்னார்)

மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் விடுதியும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தனிநபர் விடுதிகளுமாக மூன்று தங்கும் விடுதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 21 மில்லியன் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு நேற்று நண்பகல் 12 மணியளவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதோடு நிறைவேற்றுப் பொறியியலாளர் வதிவிடத்தை நாடா வெட்டி திறந்துவைத்தார். அத்தோடு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஏ.நீக்கிலாப்பிள்ளை, சட்டத்தரணி இ.கயஸ் பெல்டானோ, மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண பணிப்பாளர் கே.பிரபாகரமூர்த்தி , வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர்கள், மன்னார் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-5)

# நுழைவாயில் திறப்பு


(சோலைநகர்)

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் 67 ஆவது பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை 3 1/2 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு மூலம் கட்டப்பட்ட பாடசாலை நுழைவாயில் அலங்கார வளைவும், உருத்திரபுரம் பாடசாலையின் பழைய மாணவர் திருமதி சிவானந்தன் பபிதா 2 1/2 இலட்சம் ரூபாவில் கட்டப்பட்ட நுழைவாயில் மதில் மற்றும் பாடசாலை நுழைவாயில் கதவு ஆகியன உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வும் நடைபெற்றது. (2-5-309)

## குடிநீர் கேட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!

# பிரிகேடியர் குணவர்த்தன விளக்கமறியலில் வைப்பு



ரதுபஸ்வெலவில் சுத்தமான குடிநீர் கேட்டுப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவை விளக்கமறியலில் வைக்க கம்பஹா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


2013 ஆம் ஆண்டு போராட்டம் நடத்திய மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளை அடுத்து கைது செய்யப்பட்ட அவர் நேற்று முன்தினம் மாலை கம்பஹா பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அப்போது அவரை எதிர்வரும் மே 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் ருவான்பத்திரண உத்தரவிட்டார்.

பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன இராணுவத்தின் காலாட்படை பிரதி பணிப்பாளராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




## வெள்ளத்தில் மூழ்கியது மொரகாகந்த!



மொரகாகந்த பகுதியில் கடும் மழை காரணமாக குறித்த பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் நீரில் மூழ்கியுள்ளன. குறித்த பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுமார் 2 மீற்றர் உயரத்திற்கு நீர் நிரம்பியுள்ளது. இதனால் குறித்த பகுதியில் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## வீடு திருத்த உதவி



கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் இரண்டிற்கு வீடு திருத்தம் செய்வதற்காக சீமெந்து பைக்கட்டுகள் வழங்கப்பட்டன.

வடமாகாணசபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான சி. அகிலதாஸின் நிதி ஒதுக்கீட்டில் தலா 33 சீமெந்து பைக்கற்றுக்கள் வீதம் இரண்டு குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்று நடைபெற்ற நிகழ்வில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் வினோராஜ் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (இ-60)

# ஞானசார தேரர் குற்றமற்றவர்; பொதுபல சேனா முறைப்பாடு



பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நபராக கூறப்படும் ஞானசார தேரர் குற்றமற்றவர், அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஞானசார தேரர் விடயத்தில் அரசு மனித உரிமைகளை மீறுவதாகவும் பொதுபலனோ அமைப்பினர் நேற்று கொழும்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

மேலும், இது வரையில் ஞானசார தேரரை கைது செய்வதற்கான உத்தரவுகளோ, தகுந்த காரணங்களோ கூறப்படவில்லை. அதற்கான சில காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஞா்னசார தேரர் விடயத்தில் அரசு மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளைச் செய்துள்ளது. அதேபோன்று தேரரை கடத்தவும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே அவரைக் காப்பாற்றுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதேவேளை பொலிஸாரினை பயன்படுத்தி இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தமது அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டு வருகின்றனர்.

ஆட்சியின் குப்பைகளை வெளிப்படுத்தும் நபர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளே தொடர்ந்து கொண்டு வருகின்றது. பொலிஸாரை வைத்துக் கொண்டு அரசு நாடகமாடிக் கொண்டு வருகின்றது. இனி வரும் காலங்களில் பொலிஸ் ஆட்சி நடைபெறும் வாய்ப்பு உள்ளது அதனையும் முற்றாக எதிர்க்கின்றோம் எனவும் பொதுபல சேனா தெரிவித்துள்ளது. (இ-7)

## குடிநீர்த்தாங்கி அன்பளிப்பு




காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் 500 லீற்றர் குடிநீர்த்தாங்கி கோவளம் விளையாட்டுக் கழகத்தினரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டது. (இ-100)

## இடிந்து விழுந்த கட்டடத்தின் உரிமையாளருக்குப் பிணை

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் உடைந்து விழுந்த மாடிக் கட்டடத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கட்டட உரிமையாளர் கடந்த 21 ஆம் திகதி பொலிஸில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு பின்னர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு நேற்று கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் 25,000 ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி நளின் டி. இந்திரதிஸ்ஸ ஆஜராகியதுடன், குறித்த வழக்கு எதிர வரும் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெள்ளவத்தையில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 21 பேர் வரை காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
# VACANCIES

Applications are invited by me up to 30.06.2017 from suitably qualified persons for the following posts.

**1.CHIEF MEDICAL OFFICER (UNIVERSITY OF JAFFNA)**

Qualifications:

A Medical Degree of a recognized University with prescribed postgraduate qualifications and at least 12 years' experience as a medical practitioner.

Salary Scale:U-MO-2

89,850-15X2,020-119,880p.m as at 01.01.2020

63,828-15X1,438-85,398 p.m as at 01.01.2017

Selection: By Structured Interview

**2. UNIVERSITY MEDICAL OFFICER - (UNIVERSITY OF JAFFNA/ KILINOCHCHI PREMISES/ VAVUNIYA CAMPUS)**

Qualifications:

Medical Degree of a recognized University with at least 3 years' experience as Medical Practitioner.

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**NOTE:** One year period of service as Intern Medical Officer will be considered for therequired period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

Salary Scale: U- MO 1 (II)

Rs. 54,380-10X1, 240; 1X1,520-68,300/-p.m. as at 01.01.2020

Rs. 38,768-10X883; 1X1,082-48,680/- p.m. as at 01.01.2017.

Selection: By Structured Interview.

**3.PROJECT MANAGER – CONSTRUCTION WORKS (UNIVERSITY OF JAFFNA)**

Qualifications

1. (a) Should possess a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Civil Engineering

OR

Should possess a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Quantity Surveying

OR

Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka (IESL)

AND

(b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.

OR

Possess a corporate membership from a recognized Institute of Quantity Surveying

AND

(c) A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well managing direct labor.

Salary Scale: U-EX2 (II)

Rs.64, 710- 8X 1,240; 8X1,520-86,790 p.m. as at 01.01.2020

Rs.46,131-8X883; 8X1,082 - 61,851 p.m. as at 01.01.2017

Selection : By Structured Interview.

**4.ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (UNIVERSITY OF JAFFNA)**

Qualifications:

An Attorney-at-Law with A Degree in Law/Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

OR

An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar after obtaining the above qualification.

Salary Scale: U-EX 1(II)

Rs. 49,860-3X1,125-53,235(EB) 54,475;12X1,240-69,355/- p.m. as at 01.01.2020

Rs. 35,556-3X801-37,959(EB) 38,842;12X883-49,438/-p.m. as at 01.01.2017

Selection : By Structured Interview

**5. AUDIO VISUAL TECHNICAL OFFICER – GRADE II - (UNIVERSITY OF JAFFNA)**

Qualifications:

1. Diploma in Technology of the Open University of Special Engineering apprenticeship Certificate issued from 1989 by the National Apprenticeship Board or National Diploma in Technology or City and Guilds Final Certificate in the field of Electronics or Power, together with one year's experience in relevant video work

OR

Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with one(01) years' experience in relevant video work.

OR

2. Pass in 3 subjects at the G.C.E (A/L) Examination in Science one sitting and six (06) years' experience in Audio Visual work.

Salary Scale: U-MN3 (II) Rs 42,590- 18 X 615; 53,660 p.m. as at 2020.01.01

Rs 30,380- 18 X 438; 38,264 p.m as. at 2017.01.01

Selection: By Interview

**6. CURATOR (LANDSCAPE) GRADE III - (UNIVERSITY OF JAFFNA/ VAVUNIYA CAMPUS)**

Qualifications:

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

Salary Scale: U- EX1 (II)

Rs. 49,860- 3X1,125-53,235(EB) 54,475; 12X1,240-69,355/-p.m. as at 01.01.2020

Rs. 35,556- 3X801 - 37,959(EB) 38,842; 12X883- 49,438/- p.m as at 01.01.2017

Selection: By Structured Interview.

**7. GRADUATE TRANSLATOR- GR-II - (UNIVERSITY OF JAFFNA)**

Qualifications:

1. A degree of a recognized University with Sinhala/Tamil as a subject

AND

A credit pass in English Language or Literature at the G.C.E (Ordinary Level) Examination or should have passed the G.C.E (Advanced level) or Higher examination in the English medium.

**Note:**

1. If the vacancy is for a Sinhala/English Translator then these two subjects should be specified in the advertisement calling for applications. Similarly if the vacancy is for Tamil/English or Sinhala/Tamil then these subjects should be specified.

2. Preference will be given to graduates who have offered English as a subject for the degree and/or who are proficient in all three languages.

Salary Scale: U-MN3 (II)

Rs 42,590- 18 X 615; 53,660 p.m. as at 2020.01.01

Rs 30,380- 18 X 438; 38,264 p.m. as at 2017.01.01

Selection: By Selection Test and Interview

**8. SUPERVISOR (MAINTENANCE) GRADE III – (VAVUNIYA CAMPUS)**

Qualifications:

1. (a) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in Sinhala / Tamil / English Language or Literature and Arithmetic / Commercial Arithmetic / Mathematics;

OR

(b) Employees of the UGC or Higher Educational Institutions, who have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than three sittings with Sinhala / Tamil / English Language or Literature and Arithmetic / Commercial Arithmetic / Mathematics and who have completed 8 years' satisfactory services in such institution;

OR

(c). Employees of the University Grants Commission or Higher Educational Institutions, who have passed the 7th standard and who have completed 15 years' satisfactory services in such institutions

2. At least 3 years' experience in Labour supervision.

Salary Scale : U-MN1 (IIIA)

Rs.30,725-17x300-35,825 p.m. as at 01.01.2020

Rs.21,932-17x213 -25,553 p.m. as at 01.01.2017

Selection: By Aptitude Test and Interview

**Age limit for all the above posts: Not more than 45 years**

(*Note – Age limit is not applicable for applicants in the Government Departments /State Corporations and Statutory bodies)

**STATUTORY BENEFITS.**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.

The envelope containing duly filled application form must bear **"the name of the post applied for"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the **Senior Assistant Registrar/Establishment Branch (Non Academic) University of Jaffna, Thirunelvely, and Jaffna** on or before 30.06.2017.


Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**26.05.2017.**

(C-8690)

# ஆஸி வாழ் இலங்கையர்கள் - ஜனாதிபதி சந்திப்பு






(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு மூன்று நாள் விஜயம் மேற் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவுஸ்திரேலியா வாழ் இலங் கையர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

நேற்று முன்தினம் பிற் பகல் சிட்னி நகரில் இந்த சந் திப்பு இடம்பெற்றதாக ஜனாதி பதி ஊடகப்பிரிவு அறிவித் துள்ளது.

தொழில்வாண்மையாளர் கள், வர்த்தக சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர் கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார் இலங்கையர்கள் இச் சந்திப்பில் கலந்துகொண் டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)



# மாயமான போர் விமான பாகங்கள் கண்டுபிடிப்பு





(இட்டாநகர்)

அசாமில் மாயமான போர் விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் பயணம் செய்த 2 வீரர்கள் கதி என்ன என்று தெரிய வில்லை.

அசாம் மாநில தேஜ்பூர் விமானப்படை தளத்தில் இருந்து கடந்த 23ஆம் திகதி சுகோய்- 30 ரக போர் விமா னத்தில் 2 விமானிகள் பயிற் சிக்காக புறப்பட்டு சென்ற னர்.

தேஜ்பூரில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் பறந்தபோது திடீரென்று ரேடாரின் இணைப்பை விமா னம் இழந்தது.

ரேடார் இணைப்பை இழந்த பகுதி சர்ச்சைக்குரிய சீன எல்லையாகும். எனவே விமானம் விபத்தில் சிக்கி யதா? அல்லது வேறு கார ணங்களுக்காக தரை இறக் கப்பட்டதா? என விசாரணை நடைபெற்று வந்தது. மாய மான விமானத்தை தேடும் பணியும் நடைபெற்றது.

இதற்கிடையே மாயமான போர் விமானத்தின் பாகங் கள் அருணாசல பிரதேச மாநிலம் காமெங் மாவட் டத்தில் உள்ள மலைப் பகுதி யில் நேற்று கண்டுபிடிக்கப் பட்டது.

ஆனால்விமானம்நொறுங் கியதற்கான காரணம் குறித்த தகவல் வெளியிடப்படவில்லை. மேலும் அதில் பயணம் செய்த வீரர்கள் கதி என்ன என்றும் தெரியவில்லை.

சுகோய்-30 ரக போர் விமானம் ரஷ்யாவில் தயா ரிக்கப்பட்டது. 2 என்ஜின்களு டன் அதிவேகமாக பறக்கும் திறன் கொண்டது. கடந்த 1990ஆம் ஆண்டு முதல் இந்திய விமானப்படையில் இது பயன்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தினகரன் பிணைகோரிய வழக்கு 29ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

டில்லி நீதிமன்றில் டி.டி. வி.தினகரன் பிணை கோரிய விசாரணையை நாளை மறு தினம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட் டுள்ளார்.

இரட்டை இலை' சின்னம் பெறுவதற்காக தேர்தல் ஆணை யத்திற்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் அ.தி.மு.க. அம்மா அணி துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் டில்லி பொலிஸா ரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் காவலில் நடந்த விசாரணைக்குப்பின் டி.டி.வி. தினகரன் டில்லி திகார் சிறை யில் அடைக்கப்பட்டார்.

அவருடன் கைதான நண்பர் மல்லி கார் ஜுனாவும் சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்.

இருவரும் பிணை கேட்டு டில்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று இந்த மனு விசார ணைக்கு வந்தது. அப்போது டில்லி பொலிஸ் அதிகாரி ஆஜராக வில்லை.

இதனால் பிணை மனு விசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என்று டில்லி பொலிஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.


இதையடுத்து பிணை மனு விசாரணையை நாளை மறுதினம் ஒத்தி வைத்து நீதி பதி உத்தரவிட்டார். (இ-3)

# ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் நான் இல்லை - பிரணாப் அறிவிப்பு

(டில்லி)

எதிர்க்கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் அறி விக்க இருக்கும் நிலையில் ஜனா்திபதி பதவிக்கு மீண் டும் போட்டியிடப்போவதில்லை என பிரணாப் முகர்ஜி தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் அடுத்த மாதத்துடன் நிறை வடைகிறது. க்டந்த 2012 ஆம் ஆண்டில் ஜனாதிபதி யா்க பதவியேற்ற இவர், காங்கிரஸ் கட்சியில் மூத்த தலைவராக பல்வேறு பொறுப் புகளை வகித்துள்ளார். இந் நிலையில், ஜனாதிபதி மாளிகையின் பத்திரிகை தொடர்பு செயலாளர் வேணு



ராஜாமணிக்கு பிரிவு உப சார விழா குடியரசுத் தலை வர் மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது பேசிய பிர ணாப் முகர்ஜி. 'மீண்டும் ராஷ்டிரபதி பவனுக்கு திரும் பும் போட்டியில் பங்கேற்கும் எண்ணமில்லை. இன்னும் இரண்டு மாதங்களில் எனது பணி நிறைவு பெற இருக் கிறது. ஜுலை 25 ஆம் திகதி புதிய ஜனாதிபதி பொறுப்பேற் கவுள்ளார். என்னுடன் சேர் ந்து பணியாற்றிய அதிகாரி களை, அவர்கள் சார்ந்த அமைச்சர்களுக்கும் துறைக ளுக்கும் திரும்ப அனுப்புகி றேன்' என அவர் தெரிவித் தார். (இ)

# பேருந்து தீப்பிடித்து 8 பேர் உயிரிழப்பு

(பாட்னா)

பீகார் மாநிலம் நாளந்தா ம்ாவட்டத்தில் பேருந்து தீப் பிடித்து விபத்துக்குள்ளான தில் 8 பேர் பரிதாபமாக உயி ரிழந்தனர்.

பீகார் மாநிலம் நாளந்தா மாவட்டத்தில் பேருந்து தீப் பிடித்து விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான பேருந்து தலைநகர் பாட்னாவில் இரு ந்து ஷேக்புரா பகுதிக்கு சென்று கொண்டிருந்தது.

நாளாந்தா மாவட்டத்தின் ஹர்ட் பகுதியில் நிகழ்ந்த இந்த பேருந்து தீ விபத்தில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்த னர். 12-க்கும் அதிக மானோர் படுகாயம் அடைந்தனர்.

விபத்தில் உயிரிழந்தோ ரின் குடும்பத்துக்கு தலா ரூ.4 இலட்சம்நிவாரணத்தொகை வழங்கப்படும் என்று பீகார் மாநில அரசு அறிவித் துள் ளது. தலைநகர் பாட்னா வில் இருந்து சுமார் 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விஷ்வகர்மா சவுக் என்ற பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்த தாக ஹர்னட் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

எஞ்சினில் பிடித்த தீயா னது வேகமாக பேருந்து முழுவதும் பரவியதாகவும், சுமார் 10 பேர் இந்த விபத்தில் உயிரிழந்திருக்கக்கூடும் என் றும் அதிகாரிகள் தெரிவித்த னர். (இ-3)

# பாதுகாப்புப் படை மீது தாக்குதல் 5 மாவோயிஸ்ட்களுக்கு தூக்கு

(பாட்னா)

பாதுகாப்புப் படை மீது தாக்குதல் நடத்திய 5 மாவோ யிஸ்டு தீவிரவாதிகளுக்கு தூக்குத்தண்டனை விதித்து முங்கர் கூடுதல் மாவட்ட நீதி மன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2014ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்த போது பீகார் மாநிலம் முங் கர் மாவட்டம் காரக்பூர் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கோங்தா- லட்சு மியூர் வீதியில் பாதுகாப்புப் படை வீரர்கள் வாகனத்தில் சென்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது 50-க்கும் மேற்பட்ட மாவோயிஸ்டுகள் அவர்கள் மீது தாக்குதல் நடத் தினர். இந்த தாக்குதலின் போது பாதுகாப்பு படை வீரர் கள் சோனே கவுடா, ரவீந்திர ராய் ஆகியோர் கொல்லப் பட்டனர். இந்தத் தாக்குதலில் பாதுகாப்புப் படை வீரர்கள் 10 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் ஈடு பட்ட மாவோயிஸ்டுகள் பிபின்மண்டல், அதிக்லால் பண்டிட், ரதுகோடா, பானு கோடா, மனு கோடா ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்ட னர்.

அவர்கள் முங்கர் சிறை யில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு முங்கர் கூடு தல் ம்ாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜோதி ஸ்வரூப் ஸ்ரீவஸ்தவா முன்பு விசா ரணைக்கு வந்தது.

நேற்று முன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. இதையடுத்து மாவோயிஸ்டு கள் 5 பேரும் பலத்த பாதுகாப் புடன் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டனர்.

பின்னர் 5 மாவோயிஸ்டு களுக்கும் தூக்குத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்புக் கூறி னார். (இ-3)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளை இலக்கு வைத்து அமெரிக்கா தாக்குதல்

# 105 பொதுமக்கள் பலி!

(பக்தாத்)

**ஈராக் நாட்டில் ஐ.எஸ்.தீவிரவாதிகளை இலக்கு வைத்து அமெரிக்க விமானப் படை நடத்திய வான்வெளி தாக்குதலில் 105 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக பென்டகன் உறுதி செய்துள்ளது.**

ஈராக் நாட்டின் வடக்கு பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் வசமிருந்த முக்கிய நகரமான மொசூல் நகரை மீட்பதற்காக ஈராக் மற்றும் அமெரிக்கா நாடுகள் இணைந்த படையினர், தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். வட மேற்கு நகரங்களை தங்கள் வசம் வைத்துள்ள தீவிரவாதிகளை வான் வெளி தாக்குதல் மூலம் அழிக்கும் பணிஸ்ய தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றனர். அப்போது, மயாதீன் என்ற பகுதியில் இருக்கும் ஒரு கட்டடத்தில் தீவிர வாதிகள் பதுங்கியிருந்தனர். அவர் களை குறிவைத்து வான் வெளி தாக்குதல்களை அமெ ரிக்க படை தொடுத்தது.




அப்போது, அந்த கட்டடத்தின் கீழ் பகுதியில் வசித்து வந்த 105 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் வெளியான தகவல்களில் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு அமெரிக்க ராணுவ தலைமையகம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், வான்வெளி தாக்குதலில்தான் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பென்டகன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இதேபோன்ற வான்வெளி தாக்குதலில் வடக்கு சிரியாவில் உள்ள நகரங்களில் உள்ள 35 பொதுமக்கள் பலியானதாக சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஊடகங்களால் மிகுந்த தொந்தரவு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சலிப்பு



(வோஷிங்டன்)

மான்செஸ்டர் குண்டு வெடிப்பின் புகைப்படங்கள் அமெரிக்க ஊடகங்களில் வெளியானதால் இங்கிலாந்து அதிருப்தி தெரிவித்திருந்தது. இதனால், சம்பந்தப்பட்ட ஊடகங்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரத்தில் அமெரிக்காவின் பிரபல பொப் பாடகி ஏரியனா கிராண்ட்டின் இசை நிகழ்ச்சி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. சுமார் 10.30 மணியளவில் நிகழ்ச்சி நடைபெற்ற அரங்கில் பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்தது. இதனால் அங்கு குழுமியிருந்த 22 பேர் உயிரிழந்தனர். சுமார் 58-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மான்செஸ்டர் தாக்குதலுக்கு தாங்கள் தான் காரணம் என டெலிகிராம் செயலி வழியாக, ஐ.எஸ் இயக்கத்தினர் அறிவித்தனர். இத்தாக்குதலுக்கு முக்கிய காரணமான தற்கொலைப்படை தீவிரவாதி 22 வயதான சல்மான் 'அபேதி என அறிவித்த பொலிஸார் இதில் தொடர்புடைய 7 பேரை கைது செய்துள்ளனர்.

குண்டுவெடிப்பின் போது அந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அமெரிக்க ஊடகமானநியூயோர்க்டைம்ஸ் பத்திரிகையில் வெளியானது. இதனால், அதிருப்தியடைந்த இங்கிலாந்து, விசாரணை நடைபெறும் போது இத்தகைய செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது எனவும், "இது அமெரிக்காவின் நம்பிக்கை துரோகம்" எனவும் கடுமையாக விமர்சித்துள்ளது.


மேலும், இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இந்த புகைப்படங்களை பார்க்கும் போது மீண்டும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாவார்கள் என தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் குற்றச்சாட்டால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் கோபமடைந்துள்ளார். நடைபெற்ற சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ள டிரம்ப், ஊடகங்களின் இந்த செயல்கள் மிகுந்த தொந்தரவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-3)




## உங்கள் வெற்றியை உலகமே பேசுகிறது

### மக்ரானுக்கு ட்ரம்ப் புகழாரம்



(புருஸெல்ஸ்)

பிரான்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதி மக்ரானை சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட ட்ரம்ப் உங்கள் வெற்றி குறித்து உலகமே பேசுகிறது என்று புகழாரம் சூட்டினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றபின் முதன் முறையாக சவுதி அரேபியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி சவுதி அரேபியா, இஸ்ரேல், சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இத்தாலி சென்றார். அங்கு வாடிகன் நகரில் போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்தித்தார். இத்தாலி ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரல்லா, பிரதமர் பயோலோ ஜென்டிலோனி ஆகியோரை சந்தித்தார்.

இதனையடுத்து பயணத்தின் ஒரு பகுதியாக ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று பிரான்ஸ் நாட்டிற்கு சென்றார். அங்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி மக்ரானை ட்ரம்ப் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, "இந்த உலகமே உங்கள் வெற்றியை பற்றி பேசுகிறது. ஆச்சரியப்படும் வகையில் பிரசாரம் நடத்தினீர்கள். மிகப் பெரிய வெற்றியாக இருந்தது என்று மக்ரானிடம் ட்ரம்ப் கூறினார்.

மேலும் இந்த சந்திப்பின் போது தீவிரவாதம், வேலை வாய்ப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து இருநாட்டு தலைவர்களும் பேசினர். (இ-3)

## அமோனியா ஆறும் சூறாவளியும் வியாழன் கிரகத்தில் உள்ளது

### நாசா ஆய்வு மையம் தகவல்


(நியூயோர்க்)

வியாழன் கிரகத்தில் சூறாவளிக் காற்றும் அமோனியா ஆறும் உள்ளது என நாசா தெரிவித்துள்ளது.

வியாழன் கிரகம் பற்றி முழுமையாக ஆய்வு நடத்த அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையம் 'ஜூனோ' என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது.

அந்த விண்கலம் வியாழன் கிரகம் மீது பறந்து படம் எடுத்து பூமிக்கு அனுப்பி யுள்ளது.

அதன் மூலம் அங்கு மிகப் பெரிய அளவில் பிரமாண்டமான சூறாவளி காற்று வீசுவதுகண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



அந்த கிரகத்தின் வடக்கு முனையில் இருந்து தெற்கு முனைவரை 1400 கி.மீற் றர் தூரத்துக்கு சூறாவளிக் காற்று வீசுகிறது.

அதே போன்று அங்கு அமோனியா ஆறு ஓடுவதும் தெரியவந்துள்ளது. அது பல 100 மைல்கள் ஓடுகிறது. வளிமண்டலத்தில் பலவிதமான வாயுக்கள் கலந்து இருக்கின்றன.

மொத்தத்தில் வியாழன் கிரகத்தில் காற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. பூமியை விட 11 மடங்கு அதிகமாக மேகங்கள் உள்ளன.

'ஜூனோ' விண்கலம் வியாழன் கிரகத்தில் 4200 கி.மீற் றர் தூரம் சுற்றி நடத்திய ஆய்வில் மேற்கண்ட தகவல்கள் கிடைத்துள்ளன. (இ-3)

# இனவாதத்தை அடக்க பூரண அதிகாரத்துடன் விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

இன, மதவாத அடிப்படையில் வேறு மதத்தவர்களைத் துன்புறுத்தும் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டமிட்ட கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் முகமாக, பூரண அதிகாரத்துடன் கூடிய விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, சட்டம் ஒழுங்கு அமைச்சரின் கீழ், இந்த விசேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் திறமையான அதிகாரிகள் இந்த பிரிவுக்கு உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





காரை அபிவிருத்திச் சபையினரால் முதற்கட்டமாக காரை அபிவிருத்திச் சபையில் பதிவு செய்த 21 கண் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கண் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

## வெளிநாட்டுப் பெண்ணுடன் இலங்கையர் ஒருவர் கைது

பயண ஆவணங்கள் எதுவுமின்றி இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இலங்கையருடன் துருக்கி நாட்டு பெண் ஒருவரையும் இந்திய பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் குஜ் கிராமத்திலிருந்து Parbati valley நோக்கி நடந்து வந்துள்ளனர். இதன்போது அந்தப் பகுதியிலுள்ள பொலிஸார் அவர்களை சோதனைக்கு உட்படுத்திய வேளை, அவர்களிடம் இருந்து போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், பயண ஆவணங்களின்றி பயணித்த இலங்கையரும் அவருடன் சென்ற வெளிநாட்டுப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த உமதர்ஷன் என்ற நபரே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## 6 கைதிகளைச் சொந்த செலவில் விடுதலை செய்த ஹிஸ்புல்லாஹ்



மொனராகலை சிறைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பள்ளிவாசலை திறந்து வைப்பதற்காக அங்கு விஜயம் செய்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், குறைந்த தண்டப் பணத்தை செலுத்த முடியாமல் கடந்த எட்டு வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வரும் 6 சிறைக் கைதிகளை தனது சொந்த செலவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன், பிணை கையெழுத்திட எவருமில்லாது சிறையில் வாடுகின்ற மேலும் 23 கைதிகளை விடுதலை செய்யவும் தான் நடவடிக்கை எடுப்பதாக இதன் போது இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

மொனராகலை சிறைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பள்ளிவாசல் திறப்பு விழா கடந்த புதன் கிழமை காலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அகலவத்தையில் பாரிய மண்சரிவு

## கர்ப்பிணிப் பெண் உட்பட 12 பேர் மாயம்





(கொழும்பு)

அகலவத்தை, மாவத்தவத்த பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற பாரிய மண்சரிவில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

மூன்று வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளதாகவும் அவ் வீட்டில் இருந்தவர்களே மண்ணில் புதையுண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். காணாமல் போனவர்களை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## மொரவக்க கந்தையில் மண் சரிவு



மாத்தறை, தெனியாய, மொரவக்க கந்தையில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக குறித்த பிரதேசத்திற்கு பயணிக்கும் சகல வீதிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


அத்துடன் இரத்தினபுரி , கேகாலை, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் மண் சரிவு அவதான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களுத்துறை புலத்சிங்கள - போகஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மண் சரிவின் காரணமாக நபர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## இனந்தெரியாதோர் வீடு புகுந்து அட்டகாசம்

கொழும்புத்துறை மகேந்திரபுரத்தில் இரவு வேளையில் இனந்தெரியாத 10 பேர் கொண்ட குழு ஒன்று வாள்களோடு ஆட்டோவிலும் மோட்டார் சைக்கிளிலும் முகத்தை மூடியவாறு சென்று வீட்டில் யாருமில்லாத போது அத்துமீறி நுழைந்து வீட்டைச் சேதப்படுத்திவிட்டுச் சென்றனர். இச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் கொழும்புத்துறை மகேந்திரபுரத்திலுள்ள எட்மன் றீகன் என்பவரின் வீட்டில் இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-107)

# திருகோணமலையில் அமெரிக்க படைத்தளம்

## இருநாட்டு அரசாங்கங்களும் இரகசிய உடன்படிக்கை என திஸ்ஸ குற்றச்சாட்டு



(திருகோணமலை)

**திருகோணமலை துறைமுகத்தை மையப் பகுதியாக் கொண்டு அமெரிக்க கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், இதற்கான இரகசிய உடன்படு இலங்கை - அமெரிக்க அரசுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றஞ்சாட்டியுள்ளார்**

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய அவர்,

திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத்தளத்தை அமைப்பது குறித்து, இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருதரப்பு உடன்பாடு ஒன்று இரகசியமாக கையெழுத்திடப் பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் திருகோணமலையில்கடற்படைத்தளத்தை அமைப்பதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது. அதேவேளை, அமெரிக்காவிடம் இருந்து 400 மில்லியன் டொலர் செலவில் போர் விமானங்களையும் 300 மில்லியன் டொலர் இராணுவத் தளபாடங்களையும் இலங்கை கொள்வனவுசெய்யவுள்ளது. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லாத இந்தச் சூழலில் எதற்காக போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்? பொதுமக்களின் நிதியை எதற்காக வீணாகச் செலவழிக்க வேண்டும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7)

# புதிய பதவிகளை உருவாக்கி

# அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு; மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினை

## அநுர எம்.பி. கவலை



(கொழும்பு)

அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் வியாழக்கிழமை 23 கீழ் 2 கேள்வி நேரத்தில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசியல் யாப்பு உருவாக்கத்துக்காகவும், அரசாங்கத்தின் அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை அவர்கள் அவ்வாறு இரண்டு பதவிகளையும் வகிப்பதற்கு தனித்தனி வாகனங்களை வழங்குவது எவ்வாறு என கேட்கின்றேன் என கேள்வி எழுப்பினார்.

எனவே விரும்பியவாறு புதிய பதவிகளை உருவாக்கி அவர்களுக்கு தனித்தனியே வாகனங்களை வழங்குவது எந்த விதத்தில் நியாயம் எனவும் அநுர கேள்வி எழுப்பினார். (இ-7)

# மண்சரிவால் 3 பெண்கள் உயிரிழப்பு!

சப்புகஸ்கந்த, ஹெய்ந்தூவ பகுதியில் வீடு ஒன்றின் மீது மண் திட்டு சரிந்து வீழ்ந்ததன் காரணமாக இரண்டு பெண்கள் பலியாகினர்.

இதேவேளை, தெவிநுவர பகுதியில் இடம்பெற்ற பிறிதொரு மண்சரிவு அனர்த்தத்தில் இன்னொரு பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மீட்புப் பணிகளுக்காக படகுகள் மற்றும் உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகளில் இராணுவமும், வான்படையும், கடற் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனிடையே, தங்காலை, ரன்ன பகுதியிலும் - கதிர்காமம் பிரதான வீதி மற்றும் தங்காலை- திஸ்ஸமஹாராம - வீரகெட்டிய வீதிகளிலும் வெள்ள நீர் நிரம்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# முதலீடுகளே தேவை கடன் தேவையில்லை

## வெளிவிவகார அமைச்சர் ரவி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்கு கடன் தேவையில்லை, மாறாக முதலீடுகளே தேவைப்படு கின்றன. அந்தவகையில் கடன் சுமையற்ற நாட்டை உரு வாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படு வேன் என புதிய வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு அலுவலக த்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், "வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் சுற்றுலா சென்று கொண்டிருப்பதை தவிர் த்து இலங்கையின் அபிமானத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

ஆர்ப்பாட்டங்களையும் போராட் டங்களையும் நடத்திக் கொண்டிருந்தால்நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. இந் நிலையில், இலங்கைக்கே உரிய அபிமானத்துடன் சர்வதேச ரீதியில் நாட்டை கட்டியெழுப்பநான்நடவடிக்கைஎடுப்பேன்.

வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி, பிரதமர், சக அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்பதுடன், நாட்டை வெற்றிப் பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்லப் பாடுபடுவேன்" என்றார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### புதிதாகக் கேட்டுக் கொள்வதுண்டா?

என் கண் முன்னால் நடந்த சம்பவத்தை ஒருவர் எனக்கு அதுபற்றி ஒன்றுமே தெரியாதாக்கும் என நினைத்துக்கொண்டு விளக்க ஆரம்பிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே நான் எனக்கே சொல்றீங்களா? நான்தான் அங்கே இருந்தேன் என்கிற பாணியில் எதையேனும் சொல்லி வைப்பது என் பழக்கமில்லை.

என்னுடைய இந்தப் பாணியைக் கண்டு பிடித்து விட்ட ஒருவர் ஏங்க இப்படித் தெரிஞ்ச விடயத்தைப் போய் புதுசாக் கேட்டுக்குறீங்க! என மடக்கினார்.

நான் இப்படிச் செய்யக் காரணங்கள் உண்டு என அவருக்கு விளக்கினேன்.

முதலாவது சொல்ல வருகிறவரின் ஆர்வத்தைத் தடை போட்டுக் குலைத்து விடக் கூடாது என்பது. சரிதான் தெரியும் போய்யா! என்றதும் அவர்கள் மனத்தில் ஏமாற்றம் ஏற்பட்டு விடுகிறது. காற்றுள்ள பலூனைத் திறந்து காற்றை வெளியேற்ற நினைக்க எண்ணுகிறது ஒரு குழந்தை. ஆனால் அதைக் குண்டூசி கொண்டு பட்டென்று உடைக்கிறது எதிர்வீட்டுக் குழந்தை, ஒன்றைச் சொல்ல வருகிறார்களின் வாயை அடைப்பது கிட்டத்தட்ட பலூனை ஊசி கொண்டு உடைப்பது போன்றது. இதனை நாம் செய்ய வேண்டாம்.

அதுசரி தெரிந்த கதையைத் திரும்பக் கேட்டு என்ன ஆகப் போகிறது? என்கிறீர்களா? நியாயமான கேள்வி.

செய்தி ஒன்றுதான் என்றாலும் பத்துப் பேருக்கு அச் செய்தி மாறும் போது எப்படியெல்லாம் கை, கால்கள் ஒட்டப்பட்டுப் புது வடிவம் எடுக்கிறது தெரியுமா? இது மனித சுபாவத்தின் பல்வேறு விகாரங்களைச் சொல்லாமல் சொல்கிறது.

எனவே மற்றவர்கள் ஒரு சம்பவத்தை எப்படியெல்லாம் மிகைப்படுத்துகிறார்கள்? என்னென்ன பொய்களையெல்லாம் சேர்க்கிறார்கள் என்றெல்லாம் நாம் நன்றாகத் தெரிந்து கொள்வது அவசியம். இது அவர்களை நாம் எடைபோடவும் அவர்களது நிறங்களைப் புரிந்து கொள்ளவும் பயன்படும்.

சில நேரங்களில் அவர்களது பார்வையில் முற்றிலும் புதிய கண்ணோட்டங்கள் இருக்கலாம். இது நமக்கு மிகவும் உதவும்.

ஓ! இப்படிக் கூட இதை எடுத்துக் கொள்ளலாமே! என நம் புருவங்களை உயர்த்தும் சில நேரங்களில் நாம் அறியத் தவறிய அல்லது கவனிக்கத் தவறிய புதிய செய்திகளை மற்றவர்கள் சொல்லக் கூடும்.

கண்ணெதிரே நடந்ததை விடுங்கள்! சரியாகத் தெரியாத சம்பவங்களைக்கூட ஒருசிலர், எனக்கு எல்லாம் தெரியும் ஆரம்பிச்சிடாதே; சும்மா இரு என்று வாயைப் பொத்துகிறார்கள்.


இப்படித் தங்கள் காதில் பஞ்சை வைத்துக் கொண்டு பிறர் வாயில் பிளாஸ்ரிக் ஒட்டுகிறவர்கள் நடைமுறைக்குச் சரிப்பட்டு வராத வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

எதையும் புதிதாகக் கேட்டுக் கொள்ளுங்கள். அதில் புதுப்புது அனுபவங்கள் கிடைக்கின்றனவா? இல்லையா? என்று பாருங்கள்.

**லேனா தமிழ்வாணன்**

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—119

# இலகு தொழில்நுட்பத்தின் இன்றைய தேவை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

விவசாயச் செய்கையின் வடிவம் எம்மூரில் மாற்றம்பெறத் தொடங்கிவிட்டதன் அறிகுறிதான் விவசாயப் பண்ணைகள் வைப்பதில் பலர் ஆர்வம் காட்டுவதும் அதில் பிரச்சினையாக இருக்கும் தொழிலாளர் தேவையை ஈடு கட்ட தொழில்நுட்பத்தின் உள்ளீர்த்தலை தேடி ஊக்குவிப்பதுமாகும். தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அனைவரையும் பிரமிக்க வைக்கின்றது.

பல வேலைகளை சுலபமாக செய்வதற்கான இலகு தொழில் நுட்பங்கள் பல கண்டு பிடிக்கப்களும் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் நாம் எதிர்பார்த்த அடைவினை எட்டவில்லையென்பது மனதினை குடைகின்ற செய்தி. என்ன சாதித்தோம் என்பதில் விரல் விட்டுச் சொல்வதற்கென்று என்ன இருக்கின்றது? மாறாக நாம் உள்ளதைச் சிறப்பாக பயன்படுத்தத் தெரிந்தவர்கள். இதனால் யாரோ கண்டுபிடித்ததை நாம் அனுபவிப்பவராக உள்ளோமே தவிர நாம் உருவாக்க முனையவில்லை.

எமது கண்டுபிடிப்பு எமது தயாரிப்பு என இவ்வாறான இலகு தொழில்நுட்பங்கள் கைவிட்டு எண்ணுமளவுக்கு இல்லை.

தற்போது மேலைத்தேய நாடுகளில் தன்னியக்க உதவியுடன் பல படுத்துகின்றார்களே தவிர வேறு பயனுள்ள தேவைகளுக்கு பயன் படுத்தவில்லை.

ஆனால் இந்தியா, பாகிஸ்தான் இன்னும் ஏனைய நாடுகளிலும் இதனை விவசாய பண்ணைகளை கண்காணிக்கவும் குறிப்பாக பயிர்களில் ஏற்படும் பீடை மற்றும் நோய்களை கண்டறிவதற்காகவும் பயிர்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் வேறு பிரச்சினைகள் என்பனவற்றை கண்காணிக்கவும் பயன் படுத்துகின்றார்கள்.

தற்போது இவ்வகையான பல விதங்களில் பல விலைகளில் ட்றோன் கண்காணிப்பு கமராவுடன் கூடியதாக கருவிகள் சந்தைகளில் கிடைக்கின்றன. இவற்றைப் எம்மவர் பயன்படுத்தும் நாளை நாம் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்வோம்.

எங்களது இளைய சமுதாயம் இதற்கான முழுமுயற்சிகளையும் எடுக்க நாம் அவர்களுக்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். எங்களது கல்வியின் சிறப்பு இத்தகைய கண்டுபிடிப்புக்களுக்கு வழிசமைப்பதாக இருக்க வேண்டும். க.பொ.த.உயர்தரத்திலும் பல்கலையிலும் தொழில்நுட்பத்தை பாடமாக கற்கும் மாணவர்களுக்கான ஊக்க சக்தியாக இந்த அறிவிப்பை பிரபலப்படுத்துவோம். பொறியியல்துறை, விஞ்ஞானத் துறை, விவசாயத்துறை, மருத்துவத்துறை , தொழில்நுட்பத்துறை,


பெற்ற எமது தேசம் உலகில் அபிவிருத்தியில் முன்னிற்கும் தேசமாக நஞ்சற்றதேசமாக அனைவருக்கும் உணவு, அனைவருக்கும் தொழில், அனைவருக்கும் மகிழ்ச்சி கலந்த வாழ்க்கை கிடைக்க நாம் எல்லோரும் பாடுபடவேண்டும்.

எந்தத் தொழில்நுட்பமாயி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 135

பட்டு அன்றாட வாழ்க்கையிலேயே பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். இதனால் நாம் ஒருபுறம் சோம்பேறிகளாக மாறிவருகின்றோம் என்ற கசப்பான உண்மையுடன் இவற்றைப் பயன்படுத்துவதால் பல வேலைகளை இன்னும் வினைத்திறனாக செய்ய முடிவதாகவும் தொழில் சார்ந்த பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிவதாகவும் இவற்றை பயன்படுத்தும் தொழிலில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலகு தொழில்நுட்பமென்பது எமக்குத் தேவையான காரியங்களை செலவதிகமில்லாமல் தொழிலாளர்கள் பலரின் வேலைகளை சுலபமாக எளிய இயந்திரமயமாக்கலின் மூலம் செய்து முடிப்பதுதான். இது குறித்த தொழிலை தங்குதடையின்றி எதிர்பார்த்தளவு திறமையுடன் குறித்த நேர அட்டவணையில் செய்து முடிப்பதற்கு உதவும்.



குறிப்பாக விவசாயச் செய்கையில் பாரிய நிலப்பரப்பை முகாமைத்துவப்படுத்துவதற்கும் அதிலுள்ள வேலைகளைச் செய்து முடிக்கவும் இலகுதொழில்நுட்பங்கள் குறிப்பாக இலகுகருவிகள் தினமும் அறிமுகம் செய்யப்பட்டு அவை பலராலும் விரும்பி பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் கண்டு பிடிப்புக்கள் தினமும் அங்கே உருவாக்கப்படுவதுதான். ஆனால் எமது பிரதேசத்தில் கண்டுபிடிப்புக்களுக்கான ஊக்கம் இன்னும் போதாது என்கிறார்கள் நிபுணர்கள். புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக திட்டங்களும் பயிற்சி கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இன்னும் கூறினால் வீட்டுத் தேவைகளை தன்னியக்க பொறிமுறை மூலம் நடத்தப்படுகின்றன. வேலைக்குரிய அறிவித்தலை கட்டளையாக வழங்கினால் மட்டும் போதுமானது. இயந்திரம் (Robot) தானாக இயங்கி குறித்த வேலையை கனகச்சிதமாக முடித்து விடுகின்றது. இதைவிட தற்போது ட்றோன் (Drone) எனப்படும் றிமோட்கொன்றோலரினால் (தன்னியக்ககருவியினால்) இயக்கப்படும் சிறியளவிலான பறக்கும் கருவியின் அறிமுகம் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது.

இதனை எம்மவர்கள் திருமண வீடு மற்றும் விழாக்களில் படம் பிடிக்கவும் நிகழ்வை வீடியோவாக பதிவு செய்யவும் மட்டும் பயன்படுத்தும் போது மேலதிக அவதானிப்பும் தேவையாக இருக்கின்றது.

இவ்வாறான கமராவுடன் கூடிய ட்றோன்களை தவறான கலாசார சீரழிவுகளுக்கும் பயன்படுத்த முடியும். அதனால் சரியான சட்டதிட்ட வரைபுகளுடன் இதனது பயன்பாடு வரையறுக்கப்பட்டாலன்றி இவ்வகை தொழில்நுட்பங்களை பாதகமான தொழில்களுக்கும் பயன்படுத்துவதை தடுக்க முடியாது.

வளர்முக நாடுகளில் இனி வருங்காலங்களில் இவ்வாறான இலகு தொழில்நுட்பங்களின் வருகை நாம் எதிர்வுகொள்ளத் தயாராகினாலும் எமது உற்பத்தியாக எங்களது கண்டுபிடிப்புக்களாக இவ்வகை தொழில்நுட்பங்களை உருவாக்கி கலைத்துறை மற்றும் முகாமைத்துவத் துறையின் இணைவு பலம் மிக்க தொழிற்றுறையை கட்டியெழுப்ப உதவும் என எண்ணுவோம். இதற்கான செயற்றிட்டங்களை நாம் விரைந்து வடிவமைக்க வேண்டும்.

எமது பிரதேசத்தை அபிவிருத்தியில் உயர்த்துவதென்பது வெறுமனே கட்டடங்களின் உருவாக்காமல்ல. மனிதவலுவை முறையாக, திறமையாக பயன்படுத்துவதன் மூலம் நாம் எமக்கு தேவையானவற்றை உருவாக்கி நல்ல சிறந்த தேசத்தை வடிவமைக்க வேண்டும்.

தனிமனித ஆளுமையல்ல இது. பலரிணைந்த இயக்கத்தின் முன்மாதிரியான செயற்பாடு முழுமை

னும் சரி எமது தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஆனால் அவற்றுக்கான தெரிவும் பயன்பாடும் சரியாக முறையாக வரையறை செய்யப்படல் வேண்டும். குறிப்பாக மருத்துவத்துறையில் இதன் பயன்பாடு அதிகம் எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய தொழிற்றுறைகளுக்குள்ளும் குறிப்பாக தனியார் தொழிற்றுறையிலும் இவற்றின் பயன்பாடு அதிகம் எதிர்பார்ப்பப்படுகின்றது.

அதேவேளை மக்களுக்கான தொழில் வாய்ப்புக்களும் அதிகரித்த வண்ணமே இருக்க வேண்டும். புதிய தொழிற்றுறைகள் உருவாக்கப்பட்டாலன்றி நாம் இவற்றுக்கான களமமைத்துக் கொடுக்க முடியாது.

ஆக மொத்தத்தில் இலகு தொழில்நுட்பங்களை நாமும் எமக்கேற்ற வகையில் மலிவானதாக கண்டறிந்து அறிமுகம் செய்ய முனையவேண்டும்.

இந்தத் தேவை இனி என்றும் எமக்கு தேவையானதாக இருக்கப் போகின்றதையும் நாம் உணர்ந்து கொள்வது நல்லது. பல்லின மக்கள் வாழும் இத்தேசத்தில் ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்துவதுடன் ஒவ்வொருவருக்குமான அங்கீகாரத்தையும் வழங்கும் நிலை வரும் போது இந்த தேசம் உயர்ந்தெழும். தேசத்தின் மைந்தர்கள் என்னும் உணர்வு நிச்சயம் எமது நாட்டை பல படிகள் உயர்த்தி உயர்வானதொரு தேசமாக சுட்டி நிற்கும்.

# உண்மையை விட பொய்கள் வேகமாகப் பரவுகின்றன

## ஆஸியில் ஜனாதிபதி அறிவுரை



(கொழும்பு)

அதிகாரத்தை இழந்த குழுவை மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும் நோக்கத்துடன் சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

உண்மையை விட பொய்கள் வேகமாக பரவுகின்றன.

எனவே பொய்களை நம்ப வேண்டாம் என உலகெங்கிலும் வாழும் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவுஸ்திரேலியவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தில் கன்பரா நகரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் புலம்பெயர் இலங்கை சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், மாணவர்கள் தொழிற்றுறை சார்ந்தோர் உள்ளிட்ட பல தரப்பினர் கலந்து கொண்டனர்.

நாட்டு மக்களின் வாழ்க்கையில் சுபீட்சத்தை ஏற்படுத்த தெளிவான அபிவிருத்தி வேலைத்திட்டம் அமுலாகுகிறது.

மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி மீண்டும் யுத்தமொன்று ஏற்படாத வகையிலான சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் சில கடும் போக்குவாதிகள் தாய்நாட்டுக்கு எதிராக போலி பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்தகைய நபர்களுக்கு எதிராக எதுவித தராதரத்தையும் பாராமல் சட்டத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி கூறினார்.

தாய்நாட்டை நேசிக்கும் சகல இலங்கையர்களும் தமக்கு உதவி செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தமது அரசாங்கத்தை ஆட்சிப்பீடத்தில் ஏற்றி மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை உச்ச பலாபலன்களை பெற திடசங்கற்பம் பூண்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் விரும்பினார்கள்.

அவற்றை வலுவாக நிலைநாட்ட உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார் (இ-7)

# திருகோணமலையில் 8 குளங்களை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எட்டு குளங்களை புனரமைக்குமாறு, அப்பகுதி விவசாய அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்த நிலையில் கும்புறுபிட்டி, பகுதியில் உள்ள வண்ணாதிக்குளம், சமராக்குளம், பாலங்குளம், வீரஞ்சோலையில் ஆணை விழுந்தான் குளம், இரணக்கேணி செம்பிக்குளம், குச்சவெளி ஒட்டுவெளிக்குளம், நிலாவெளி சின்னமதுரங்குளம், பெரியமதுரங்குளம் போன்ற பழைமையான குளங்களை புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டு யுத்த காலத்தின்போது எவ்வித அபிவிருத்திச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாது காணப்படும் நிலையில், இக்குளங்களால் பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்கள் செய்கை பண்ண முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இதுமாத்திரமன்றி விவசாயம் மேற்காள்ள நீர் போதுமானதாக இல்லாது உள்ளதாகவும், எனவே இவற்றை புனரமைத்து விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகுக்குமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (இ-7)

# அனர்த்த நிலைமை; அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

## சபை முதல்வர் லக்ஸ்மன் தகவல்



கடும் மழையின் காரணமாக சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முப்படை மற்றும் ஏனைய அனைத்து பிரிவினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கடும் மழையின் காரணமாக நாட்டின் சில பிரதேசங்களில்ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்று சபையில் வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார். அரசாங்கம் தற்பொழுது இதுதொடர்பில் தேவையான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் செயற்படுமாறு உரிய பிரிவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார்.

கட்சி வேறுபாடின்றி இது தொடர்பில் செயற்படுவோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1084

Search for people, places and things | Nagendram | Home

நிரோசன்




ஆர்த்தி




வினோத்




பிரசாந்




காயத்திரி




மோகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ்நாடு- ஓர் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்


இலங்கைத் தமிழ் மக்கள் வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்த பொழுதும் தமிழ்நாட்டின் அண் மைக்கால வரலாறு, பொருளாதாரம், கைத்தொழில் வளர்ச்சி, தொழில் நுட்பத் துறைகளில் அடைந்துள்ள மேம்பாடுகள் மற்றும் சமூகக் கட்டமைப்புக்கள், கலாசாரம் போன்ற விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து தெளிவான அறிவு பெற்று இருக்கின்றார்களா என்பது கேள்விக்குறியாகும். தமிழ் சினிமா, தமிழ் சின்னத்திரை தமிழக அரசியல் மற்றும் பிரசித்தி பெற்ற திருத்தலங்கள் பற்றி ஓரளவு விபரங்கள் தெரிந்தவர்களாக இருப்பதைக் காணமுடிகின்றது. மேலும் இந்தியத் துணைத்தூதரகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பட்ட பிறகு வடபகுதி மக்கள் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழ் நாட்டிற்கு தலயாத்திரை, கல்வி, மருத்துவம் தொடர்பாக போக்குவரத்து அதிகரித்துள்ளதைக் காணலாம்.

மேலும் இந்தியா பற்றிய அறிவையும் குறிப்பாக தமிழ் நாடு, தமிழ் கலாசாரம் பற்றிய அறிவை மேம்படுத்த புரிந்துணர்வை வளர்க்க யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழ்நாடு இந்தியாவின் 28 மாநிலங்களில் ஒன்றாகும். ஆந்திரா, கர்நாடக மாநிலங்கள் இதன் வட எல்லையாகவும் கேரளா மாநிலம் மேற்கு எல்லையாகவும் இருக்கின்றன. கிழக்கு, மேற்கு எல்லைகள் இந்து சமுத்திரமாகும். இந்தியா- இலங்கை கடல் எல்லை, செயல்நிலையில் இது தமிழ் நாடு- இலங்கை கடல் எல்லையாகவுள்ளது. அண்மைக் காலமாக பாக்கு நீரிணை இந்திய- இலங்கை மீனவர்களுக்கிடையே பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் குறித்த முரண்பாடுகள் எழுந்துள்ளன. இலங்கை தமிழக மீனவர்கள் இலங்கைக்குரிய கடற்பரப்புகளில் அத்துமீறி மீன்பிடிக்கிறார்கள் என்றும் மேலும் பிழையான இயற்கைக்கு அழிவை ஏற்படுத் தக்கூடிய மீன்பிடி முறைகளைக் கைக்கொண்டு மீன்பிடிப்பதால் கடல்வளம் அழிக்கப்படுவதாகவும் அதனால் வடக்கு மாகாண தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என இலங்கை அரசாங்கம் கூறுகின்றது.

இதற்கு தமிழ்நாட்டு மீனவர்கள் இந்திய அரசு தங்களுக்குச் சொந்தமான கச்சதீவை தமிழ் நாட்டின் அனுமதியில்லாமல் இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததன் பின் விளைவே இன்றைய பிரச்சினை எழக் காரணம் என்கின்றனர். ஆனால் கச்சதீவு, நெடுந்தீவு நிர்வாகத்துக்குஉட்பட்டுஇருந்ததற்குநிறைய வரலாற்றுச்சான்றுகள் உள்ளன.

முப்பது ஆண்டு யுத்தத்தால் வடபகுதி மக்களின் மீன்பிடித் தொழில் பாதிப்படைய அதே நேரத்தில் தமிழ்நாட்டின் மீன்பிடித் தொழில் அபரிமிதமான வளர்ச்சி பெற்றதால் அவர்கள் இலங்கைக் கடற்பரப் பில் தங்கள் தொழிலை விரிவுபடுத்தினர்.




வரலாற்று ரீதியில் தமிழ் பேசும் நல்லுலகம் வடக்கே வேங்கட மலையும்தெற்கேகுமரிமுனையை எல்லைகளாகக் கொண்டது. தமிழர் பிரதேசம் அன்று சேர, சோழ, பாண்டிய அரசுகளின் நிலப்பரப்புக்களை உள்ளடக்கியதாக அன்று இருந்தது. மேலும் இன்றைய தமிழ்நாடு, கொங்கு நாடு, புழல் நாடு, தொண்டை நாடு, நாஞ்சில் நாடு மற்றும் வேநாடு ஆகிய புவியியற் பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

தமிழர்கள் நிலங்களை புவியியற் காரணிகளை உள்வாங்கி ஐந்து வகையாக பிரித்திருந் தனர். அவையாவன, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை.


தமிழ்நாடு மிகவும் நீண்டகால வரலாற்றைக் கொண்டது. கி.மு. 300 இற்கு முற்பட்ட காலம் சங்க காலத்திற்கு முற்பட்டது. கி.மு. 300- கி.பி 300 இற்கு இடைப்பட்ட காலத்தை சங்க காலமெனக் கூறுவர்.

இக்காலத்தில் தமிழ்நாட்டில் பல சிற்றரசுகள் இருந்ததுடன் தமிழ்மொழியும் இலக்கியச் செழுமை பெற்று இருந்ததை சங்க இலக்கியங்கள் மூலம் அறியக் கிடக்கின்றன. இன்றைய தமிழ் நாடு அன்று சேரநாடு, சோழ நாடு, பாண்டியநாடு என மன்னர்களால் ஆளப்பட்டன.

தமிழ்நாட்டின் வடபகுதியில் பல்லவர் ஆட்சி வலுப்பெற்றிருந்ததுடன் இவர்களது காலத்தில் திருத்தலங்கள், சிற்ப, சித்திர வேலைகள் சிறப்புற்று இருந்தன. மகாவலிபுர சிற்ப வேலைகள் பல்லவ மன்னர்களின் ஆட்சியில் உருவாக்கப்பட்டவையாகும்.

10 ஆம் நூற்றாண்டில் இருந்து சோழ சாம்ராச்சியம் இன்றைய வங்களாதேசம், மலேசியா, இந்தோனேசியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது (படம் 01). பதினாறு இலட்சம் சதுர மைல் நிலப்பரப்பு சோழ சாம்ராச்சியத்துக்கு உட்பட்டிருந்தது. இந்தியாவில் முன்னர் இருந்த அரசுகளில் மிகப்பெரிய கடற்படையை வைத்திருந்த பெருமை சோழ அரசாகும். சோழர்களின் வீழ்ச்சிக்கு பின்னர் பாண்டியர் முக்கியத்துவம் பெற்றனர். இவர்களது ஆட்சி 16 ஆம் நூற்றாண்டு வரை முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதன் பின்னர் தமிழ்நாட்டின் பெரும் பகுதி விஜய நகர ஆட்சிக்குட்பட்டும் முஸ்லிம்களின் ஆட்சிக் கும் உட்படலாயிற்று.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாடு முழுவதும் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்படலாயிற்று. சென்னையை மையமாக கொண்ட மதராஸ், பிறசிடென்சி இன்றைய தமிழ் நாடு, ஆந்திரா, ஒரிசா மற்றும் கேரளாவின் வடபகுதி மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளை உள்ளடக்கியிருந்தது (படம் 02). மிகப்பெரிய பிரதேசத்திற்கு தலைநகராக இருந்த சென்னை ஒரு சிறு கிராம நிலையிலிருந்து மிகப் பெரிய நகராக வளர்ச்சி பெற்றது. 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது மதராஸ் மாகாணம் முக்கிய மாகாணமாக இருந்தது. இந்திய சுதந்திரத்தின் பின்னர் 1952களில் மதராஸ் மாநிலத்திலிருந்து தெலுங்கு மொழி பேசும் பகுதிகள் பிரிக்கப்பட்டு ஆந்திரமாநிலம்உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. புட்டி சிறலமேலு என்பவர் இக்கோரிக்கையை முன்னெடுத்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.




இவர் முன்னெடுத்த ஆந்திர மாநிலத்தில் மதராஸ் நகரமும் உட்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் வைத்திருந்தார். மதராஸ் நமதே என்ற சுலோகம் தெலுங்கர்களால் உச்சரிக்கப்பட்டது. அதா வது சென்னை நக ரில் கூவம் ஆற்றுக்கு வடக்கே யுள்ள நிலப்பரப்பு ஆந்திராவுக்கு சேர வேண்டுமென்று தெலுங்கர்கள் அழுத்தம் கொடுத்தனர். இத னால் மதராஸ்பட்டணம்குறித்து பலமுன் மொழிவுகள் முன் வைக் கப்பட்டன.

தமிழர்கள் மதராஸ் தமிழ் நாட்டின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டில் இறுக்கமாக இருந்தனர்.

இந்நகரை வடக்கு- தெற்காகப் பிரித்து வடபகுதியை ஆந்திராவுக்கும் தென்பகுதியைத் தமிழ் நாட்டுக்கும் கொடுப்பது என்றொரு கருத்து முன்வைக்கப்பட்டது.

மதராஸ் நகரை இரு மாநிலங்களின் தலைநகராக மாற்றுவது இன்னொரு கருத்தும் முன்வைக்கப்பட்டது. மதராஸ் நகரை மத்திய அரசின் ஆட்சிப் பரப்பாக வைத்திருக்க (Union Territory) வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இக் கோரிக்கைகளை தமிழ், தெலுங்கு அரசியல் தலைவர்கள் முன்னெடுத்த பொழுது ஒரு உடன்பாட் டுக்கு வரவில்லை.

தெலுங்கு மாநிலக் கோரிக்கை வலுப்பெற அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு 1953 இல் ஆந்திர மாநில உருவாக்கத்தை வெளியிட்டார். மதராஸ் நகரை தமிழ் நாட்டுக்கும் கொடுப்பதென்றும் சித்தூர் மாவட் டத்தை புதிய ஆந்திர மாநிலத்திற்கு கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. சித்தூர் மாவட்டம் தமிழர்களும் தெலுங்கர்களும் கலப்பாக வாழும் பிரதேசமாக இருந்ததுடன் திருப்பதி, திருத்தணி, ஸ்ரீ காளகஸ்தி போன்ற முக்கிய தலங்களைக் கொண்ட இம் மாவட்டம் ஆந்திராவுக்குச் சென்றது தமிழ்நாட்டுக்குப் பெரிய இழப்பாக இருந்தது.

பின்னர் தமிழ்நாட்டின் முதல்வர் காமராஜரும் ஆந்திர முதல்வர் நிஜலிங்கப்பாவும் கலந்து பேசி தமிழ்நாடு – ஆந்திரா எல்லைப் பகுதிகளில் சிறு மாற்றங்களைச் செய்தனர். இதனால் எல்லைப்புறத்திலிருந்து முந்நூற்றுக்கு மேற்பட்ட தமிழ், தெலுங்கு கிராமங்கள் கைமாற்றப்பட்டன.

இதனால் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி தமிழ் நாட்டுக்கு கிடைத்தது தமிழர்களுக்கு பெரும் மன நிறைவைக் கொடுத்தது. எனினும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் சித்தூர் மாவட்டத்தில் தமிழ்நாட்டின் எல்லையை அண்டி வாழ்கின்றனர். புத்தூர், நாகரி, சத்தியவேடு, சலூர்பேட்டை, சித்தூர், குப்பம், வேப்பஞ்சேரி, பலமம்மனார் ஆகியன தமிழர் செறி வாக வாழும் குடியிருப்புகளாகும்.

காலத்துக்கு காலம் இவர்கள் தங்களை தமிழ்நாட்டுடன் இணைக்குமாறு கோரிக்கை விடுவர். ஆந்திராவில் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியுரிமையைப் பெறுவதிலும் மற்றும் அபிவி ருத்தியில் பங்கு கொள்வதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வரலாற்று ரீதியில் தமிழ் பேசும் நல்லுலகம் வடக்கே வேங்கடமலையையும் தெற்கே குமரி முனையையும் எல்லையாகக் கொண்டது. இந்த எல்லை மாற்றத்தால் வரலாற்று எல்லையையும் திருப்பதியையும் தமிழ்நாடு இழந்துள்ளது.

மேலும் அன்றைய தமிழ் பேசும் சேரநாடு இன்று மலையாள மொழி பேசும் பகுதியாக மாறியதால் தமிழ் கூறும் நல்லுலகம் சிறிதாகியுள்ளது. ஆந்திர மாநிலம் உருவாக்கத்தைத் தொடர்ந்து இந்தியாவில் மொழி வழி மாநிலக் கோரிக்கைகள் எழுந்தன.

மொழிவாரியாக மாநில உருவாக்கத்தை ஏற்ற மத்திய அரசு இதற்கான ஆணைக்குழுவை அமைத்தது. இதனால் மதராஸ் மாநிலத்தில் கன்னட மற்றும் மலையாள மொழி பேசும் பகுதிகள் மதராஸ் மாநிலத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு கர்நாடக மாநிலத்துக்கும் கேரளாவுக்கும் கொடுக்கப்பட்டன.

இதுபோல கேரளாவிற்குள் இருந்த தமிழ் பகுதிகள் சில தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டன. கேரளாவிலிருந்து தேவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளங்கோடு ஆகிய பகுதிகள் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றன. இதுவே இன்றைய கன்னியாகுமரி மாவட்டமாகும்.

செங்கோட்டைப் பகுதியை முழுமையாகத் தமிழ் நாட்டுக்கு கொடுப்பதாக முதலில் உறுதியளித்த பொழுதும் பின்னர் செங்கோட்டைப் பகுதியின் கிழக்குப் பகுதி மாத்திரமே தமிழ்நாடு பெற முடிந்தது. இதுபோல கேரளாவுக்குள் இருக்கும் பீர்மேடு, தேவிகுளம் ஆகியபிரதேசங்களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பொழுதும் புவியியற் காரணிகளை கருத்திற் கொண்டு இப்பகுதிகள் கேரளாவிற்கு கொடுக்கப்பட் டன.

இன்றும் இவ்விரு பிரதேசங்கள் கேரளாவுக்குள் தமிழ்ப் பிரதேசங்களாக இருந்து வருகின்றன. இதுபோல பாலக்காடு மாவட்டத்தில் பாலக்காடு தலுக்காவில் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்த பொழுதும் இத்தாலுக்கா, பாலக்காடு நகரைஉள்ளடக்கியிருந்தனாலும் பாலக்காடு நகர் மாவட்டத்தின் தலைநகர் என்ற காரண த்தால் இம்மாவட்டம் கேரளாவுக்கு முழுமையாகக் கொடுக்கப்பட்டது. மொழிவாரிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுதும் மாநில எல்லைப் பகுதிகளில் இரு பக்கமும் மொழி வழிச் சிறு பான் மையினர் இருக்கும் நிலையை முற்றாக தவிர்க்க முடியாது போயிற்று. (திங்கள் தொடரும்)

# வடக்குப் பாடசாலைகளில் பிளாஸ்ரிக் பைகளைத் தவிர்ப்பதற்கு உறுதிமொழி

## மே 29ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகளையும் ஒரு நாள் பயன்படுத்திவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருட்களையும் தவிர்ப்பதற்கான உறுதிமொழி மே 29ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது என வடக்கு சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சுற்றாடல் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், ஐக்கியநாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாகச் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல்பற்றி உலகின் கவனத்தை ஈர்த்து, விழிப்புணர்வை ஏற்படுத்திச் சூழல் பாதுகாப்பில் அனைவரினதும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வேண்டுவதே இத்தினத்தின் நோக்கமாகும். இதையொட்டி, ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உலக சுற்றுச் சூழல் தினத்துக்கு முன்னரான, மே 29 தொடங்கி ஜூன் 4 வரையான ஒருவார காலப்பகுதி தேசிய சுற்றுச்சூழல் வாரமாகக் கடைப்பிடிகப்படவுள்ளது.

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தின் தொடக்க நாளான மே 29ஆம் திகதி காலை ஒன்றுகூடலின்போது சகல பாடசாலைகளிலும் எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒருநாள் பாவித்துவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருட்களைப் பயன்பாட்டில் இருந்து விலக்குவது தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவடக்கு சுற்றாடல் அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடுகள் செய்துள்ளது.

அன்றைய தினம், "பிளாஸ்ரிக் கழிவுகளினால் இயற்கைச் சூழலுக்கும் மனித உடல் நலத்துக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்புகளைக் கருத்திற் கொண்டும், வருங்கால சந்ததிகளுக்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலைக் கையளிக்கும் நோக்குடனும் எல்லாவகையான பிளாஸ் ரிக் பைகளையும், ஒருநாள் பாவனைக்குரிய பிளாஸ்ரிக்கினால் ஆன குவளைகள், போசன விரிப்புகள் (Lunch Sheets) உணவுத் தட்டுகள், உணவுப் பெட்டிகள் ஆகியவற்றையும் இன்றில் இருந்து பயன்படுத்தவும் கொள்வனவு செய்யவும் மாட்டோம்". என்ற உறுதிமொழி சகல பாடசாலைகளிலும் எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு, பாடசாலை நிதியில் அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய சங்கங்களின் நிதியில் பிளாஸ்ரிக் பைகள் மற்றும் ஒருநாள் பாவனைக்குரிய பொருட்கள் கொள்வனவு செய்வதை முற்றாகத் தவிர்க்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது என அந்தச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பத்துர்லியவில் மண்சரிவால் 5 வீடுகள் மண்ணில் புதைவு



பததுரலய, மாவ்தவனன பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், ஐந்து வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளதாகவும்பொலிஸார்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இநத அனரததம ஏறபடும் போது, குறித்த வீடுகளில் மக்கள் இருந்தார்களா? இல்லையா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## பரீட்சை ஒத்திவைப்பு

வெள்ள அனர்த்தம் காரணமாக, இன்றுநடைபெறவிருந்த பொது நிர்வாக சேவை பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த பரீட்சையை நடத்துவதற்கான மற்றுமொரு தினம் தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும், விரைவில் பரீட்சை தினத்தை அறிவிப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். சீரற்ற வானிலை காரணமாக நாட்டில்ஏற்பட்டுள் அனர்த்த நிலை தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நுவரெலியாவில் அடை மழை; நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு;குடியிருப்புகளுக்கு பாதிப்பு







(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழையினால் பல பகுதிகளில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம்மாலை முதல் பெய்துவரும் கடும் மழையில் போக்குரவத்து தடைப்பட்டுள்ளதுடன் குடியிருப்புகளுக்கும் சேதமேற்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை ஹற்றன் ஸ்டைதண் தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் குடியிருப்பின் ஒருபகுதி சேதமாகியுள்ள நிலையில் குடியிருப்பிலுள்ள 5 பேர் உறவினகளின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியில் அப்புகஸ்தனை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் போக்குவரத்து தடைப்பட்டது.

லக்ஷபான நோட்டன் பிரதான வீதியில் 2ம் கட்டை பகுதியில் பாரிய மரமொன்று வீதியில் முறிந்து வீழ்ந்தமையினால் லக்சபான நோட்டன், ஹற்றன், கினிகத்தேனை பகுதிகளுக்கான போக்குவரத்து அதிகாலை முதல் 7.30 மணிவரை தடைப்பட்டது.

மேலும் நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் நோட்டன் பிரிட்ஜ் நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியுள்ளது. மேலும் லக்ஷபான, கெனியன் நீர்த்தேக்கங்களில் தலா இரண்டு வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கங்களில் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையினால் களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீரற்ற காலநிலையால் 97 வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7)

## வெள்ளப் பெருக்கில் சிக்கிய நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்ப)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மாத்தறை பிரதேசத்தில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கில் நிதி இராஜங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் அவரது மகனான தெற்கு மாகாண சபை உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் ஆபத்தில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

தற்போது அவர்களின் வீடு 15 அடி அளவு நீரில் மூழ்கியுள்ளதாகவும், அவர்கள் தங்கள் வீட்டின் மேல் மாடியில் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்கு உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் உயிரை காப்பாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஹெலிகொப்டர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



2000ஆம் ஆண்டில் மாத்தறையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் பின்னரான காலப்பகுதியில் தற்போது பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மரம் முறிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கஹவத்தை பிரதேச செயலகப்பிரிவு, மதலகமவில் வீதியில் நடந்து சென்ற நபர் மீது பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததில் குறித்த நபர் சம்பவ இடத்திலே பலியாகியுள்ளதாக கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை நடந்த இச்சம்பவத்தில் ஜீ.ஏ.காமனி பெரேரா (வயது 52) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வியாபார நிலையமொன்றுக்கு வந்து விட்டு பின் வீடு செல்லும்போதே இவ் அனர்த்தத்தை எதிர் கொண்டுள்ளார். (இ-7)




# நொண்டிக் குதிரை



காட்டில் அடர்ந்த புல்வெளியில் ஏராளமான குதிரைகள் வசித்து வந்தன. அந்தக் குதிரைகளின் கூட்டத்தில் நொண்டிக் குதிரை ஒன்றும் இருந்தது. மற்றக் குதிரைகள் எல்லாம் அந்த நொண்டிக் குதிரையை மட்டமாகவே நினைத்தன.

எல்லாக் குதிரைகளும் அந்தப் புல்வெளியில் ஓடியாடி விளையாடுகின்ற நேரத்தில் அந்த நொண்டிக் குதிரையானது அமைதியுடன் ஓரிடத்தில் படுத்திருக்கும். அதனால், மற்ற குதிரைகள் எல்லாம் அதனை சோம்பேறி என்று கேலி செய்தன.

நண்பர்கள் எல்லாம் தன்னைக் கேலி செய்கிறார்களே என்று நொண்டிக் குதிரைக்கு சற்று வருத்தமாகயிருந்தது. நண்பர்கள் எல்லாம் அறியாமையின் காரணமாக இப்படிக் கேலி செய்கின்றனர். அதனால் நாம் அவர்களின் மீது கோபப்படுவது நல்லதல்ல... என்று முடிவு செய்தது அந்த நொண்டிக் குதிரை.

ஒருநாள், சிங்கம் ஒன்று அந்தப் புல்தரையின் பக்கமாக வந்தது. அந்த இடத்தில் ஏராளமான குதிரைகள் புற்களை மேய்ந்தபடி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தது.

“ஆஹா, இந்த இடத்தில் ஏராளமான குதிரைகள் நிற்கின்றனவே... இந்தக் குதிரைகள் எல்லாம் நன்கு கொழுத்து காணப்படுகின்றன. நாம் வந்திருப்பது தெரிந்துவிட்டால், இந்தக் குதிரைகள் எல்லாம் ஒரே ஓட்டமாக எங்காவது ஓடி விடும். அதனால், இந்தக் குதிரைகளுக்குத் தெரியாமல் மறைந்திருந்து நாம் இவைகளைத் தாக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்தது சிங்கம்.

புல்தரையின் ஓர் ஓரத்தில் படுத்திருந்த நொண்டிக் குதிரை, சிங்கத்தை கவனித்து விட்டது. இந்தச் சிங்கம் நம்மையும், நம் நண்பர்களையும் கவனித்து விட்டது. நிச்சயமாக இதனால் நமக்கு ஆபத்து நேரிடும். சிங்கம் அந்த இடத்தை விட்டுச் சென்ற பின்னர், உடனடியாக இதனைப்பற்றி நம் நண்பர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று நினைத்தது அந்தக் குதிரை.

சிறிது நேரத்தில் சிங்கம் அந்த இடத்தை விட்டுச் சென்றது. உடனே அந்த நொண்டிக் குதிரை மற்ற குதிரைகளை நோக்கியது.

நண்பர்களே, சற்று நேரத்திற்கு முன்னர் சிங்கராஜா மறைந்திருந்து நம்மையெல்லாம் கவனித்துச் சென்றுவிட்டார். இன்னும் ஓரிரு நாட்களில் அவரால் நமக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கிறது. நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள, உடனடியாக இந்த புல் வெளியினை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட வேண்டும் என்றது.

நொண்டிக் குதிரையின் பேச்சைக் கேட்ட மற்ற குதிரைகள் எல்லாம் சிரித்தன.

நண்பர்களே, இந்த நொண்டிக் குதிரையின் பேச்சைக் கவனித்தீர்களா? இவன் நம்மையெல்லாம் பயம் காட்டுகின்றான். சிங்கராஜா நம்மைப் பார்த்து விட்டாராம். அதனால் நாம் இந்த இடத்தை விட்டு வேறு எங்காவது செல்ல வேண்டுமாம். கேட்பதற்கே மிகவும் வேடிக்கையாக இருக்கிறது என்று ஒன்றுக்குள் ஒன்று கூறியபடி சிரித்துக் கொண்டன.

நண்பர்கள் எல்லாம் நம்மை ஏளனம் செய்கின்றார்களே, இவர்களுக்கு நான் நல்லதை சொல்ல நினைத்தேன்.

ஆனால், இவர்களோ என்னை ஏளனப்படுத்துகின்றனர். இவர்கள் எல்லாம் சிங்கத்தின் பிடியில் சிக்கிக் கொண்டால்; என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. என்ன இருந்தாலும் இவர்கள் எல்லாம் எனது நண்பர்கள்தானே,

இவர்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்வது என்னுடைய கடமையல்லவா? சிங்கராஜாவின் பிடியில் இருந்து எப்படியாவது நண்பர்களை காப்பாற்ற வேண்டும். வரப்போகிற ஆபத்தை உடனே தடுத்தாக வேண்டும், அதற்கு நாம் என்ன செய்யலாம் என்று யோசனை செய்தது.

திடீரென அதன் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. அதன்படி அந்தக் குதிரையானது சிங்கத்தைத் தேடிச் சென்றது. தன் எதிரே தைரியத்துடன் ஒரு குதிரை நொண்டியபடி வருவதை, வியப்போடு பார்த்தது சிங்கம்.

சிங்கராஜாவே, வணக்கம். என் வருகை உங்களுக்கு வியப்பினை ஏற்படுத்தலாம். இருந்தாலும் உங்களுக்கு சந்தோசமான செய்தி சொல்லவே வந்துள்ளேன். என்னை நம்புங்கள் என்று பணிவோடு கூறியது குதிரை.

சிங்கமோ கர்....கர்...., என்று உறுமியது. அதன் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. இருந்தாலும் நொண்டியபடி நடந்து வந்த குதிரையைப் பார்த்து சற்று பரிதாபப்பட்டது.

சிங்கம் ஓரளவுக்கு தன்னைப் பார்த்து பரிதாபப்படுகிறது என்பதை குதிரை உணர்ந்து, தன் எண்ணத்தைத் தெரிவிக்க இதுதான் சரியான சமயம் என்று முடிவு செய்தது.

சிங்கராஜாவே, நீங்கள் கருணை மிக்கவர் என்று எனக்குத் தெரிகிறது. உங்கள் முகத்தில் கருணை பொங்குகிறது. கருணையே வடிவான உங்கள் முகத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்று எனக்குத் தோன்றுகிறது என்றது.

குதிரையே, நீ கூறியது போல் கோபமாக இருக்கும் நேரம் போக அவ்வப்போது எனக்குக் கருணை ஏற்படுவது உண்மைதான். என் கருணை பார்வையை குறிப்பால் உணர்ந்து கொண்ட நீ அறிவு மிக்கவனாகத்தான் தெரிகிறாய். முதலில் நீ எதற்காக என்னை சந்திக்க வந்தாய்? ஏதோ சந்தோசமான செய்தி என்றாயே, அது என்னவென்று உடனடியாக எனக்குத் தெரியப்படுத்து, என்றது சிங்கம்.

தொடரும்...

## 05.2017 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1703 - ரஷ்ய சார் மன்னன் முதலாம் பீட்டர் புனித பீட்டர்ஸ்பேர்க் நகரை அமைத்தான்.
- 1860 - இத்தாலியின் ஒற்றுமைக்காக கரிபால்டி சிசிலியின் பலேர்மோ நகரில் தாக்குதலை ஆரம்பித்தான்.
- 1883 - ரஷ்யாவின் மன்னனாக மூன்றாம் அலெக்சாண்டர் முடி சூடினான்.
- 1937 - கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலம் திறக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சில்டன்கேர்க் என்ற இடத்தில் ஜேர்மனியரிடம் சரணடைந்த ஐக்கிய இராச்சியத்தின் நோர்ஃபோக் பிரிவைச் சேர்ந்த 99 பேரில் 97 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் பிஸ்மார்க் போர்க் கப்பல் வட அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டதில் 2,100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1960 - துருக்கியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது செலால் பயார் அதிபர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1965 - வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தெற்கு வியட்நாம் மீது குண்டுகள் வீசித் தாக்குதலைத் தொடுத்தன.
- 1967 - அவுஸ்திரேலியாவில் நடந்த வாக்கெடுப்பில் ஆதிவாசிகளை மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அடக்கவும் அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்க மக்கள் அங்கீகாரம் அளித்தனர்.
- 1994 - சோவியத் அதிருப்தியாளர் அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் 20 ஆண்டுகளின் பின்னர் ரஷ்யா திரும்பினார்.
- 1997 - முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகள் படகில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 8 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஜாவாவில் நிகழ்ந்த (உள்ளூர் நேரம் காலை 5:53:58, UTC நேரம் மே 26 இரவு 10:53:58) நிலநடுக்கத்தில் 6,000 பேர் வரை பலியாகினர்.

### பிறப்புகள்

- 1907 - ராச்சேல் கார்சன், அமெரிக்க உயிரியியலாளர் (இ.1964)
- 1923 - ஹென்றி கிசின்ஜர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1956 - கிசெப்பே டோர்னடோரே, இத்தாலிய திரைப்பட இயக்குநர்
- 1975 - மைக்கேல் ஹசி, அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்.
- 1977 - மகேல ஜயவர்தன, இலங்கை துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

- 1910 - ராபர்ட் கோக், ஜேர்மனிய அறிவியலாளர் (பி. 1843)
- 1964 - ஜவஹர்லால் நேரு, முதலாவது இந்தியப் பிரதமர் (பி. 1889)
- 1597 - டொன் யுவான் தர்மபால, இலங்கை கோட்டே மன்னன்

### சிறப்பு நாள்

- பொலீவியா - அன்னையர் தினம்
- நைஜீரியா - சிறுவர் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 200 | 120 | 130 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 80 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 280 | 260 | 140 | 300 |
| தக்காளி | 100 | 120 | 80 | 120 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 80 | 70 |
| கோவா | 160 | 200 | 140 | 160 | 160 | 140 |
| கரட் | 250 | 400 | 200 | 320 | 400 | 200 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 280 | 350 | 280 | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 180 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 100 | 90 | 100 | 120 | 150 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 160 | 140 |
| கறிமிளகாய் | 250 | 100 | 100 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 100 | 100 | 150 |
| போஞ்சி | 180 | 250 | 140 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 50 | 100 | 120 | 140 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 50 | 100 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 70 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | — | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 280 | 200 | — | — | 280 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 80 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | 120 | — | 100 |

வெள்ளம் வரும் முன்பே அணை கட்ட வேண்டும்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் களைதல் வேண்டும்

இயற்கையின் சீற்றம் ஏற்படுத்தும் அழிவுகள் அடிக்கடி இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

காலநிலை மாற்றம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தாமல் விட்டுவிட்டோம் என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை எனலாம்.

இயற்கையின் வளங்களைப் பாதுகாக்கத் தவறியதன் விளைவாக காலநிலை மாற்றத்தைக் கூற முடியும்.

தற்போது தென்பகுதியில் பெய்து வரும் கடும் மழை – வெள்ளப்பெருக்கு காரணமாக நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இறந்து விட்டதான செய்திகள் நெஞ்சை அடைக்க வைக்கின்றது.

கூடவே நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் காணவில்லை என்ற தகவலும் என்ன வாழ்க்கை? என்ற விரக்தி நிலைக்கு மனித சமூகத்தை தள்ளிவிடுகின்றது.

தென்பகுதியில் மழை கொட்டி பெருவெள்ளம் பாய்ந்தோட, வடபுலத்தில் கடும் வரட்சி மக்களை வாட்டுகிறது.

பயிரினங்கள் காய்ந்து போகுமளவில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுமளவில் வரட்சியின் கொடூரம் எங்கள் சீவனோபாயத்துக்கு பங்கம் விளைவிக்கின்றது. இதுவே இலங்கையின் இன்றைய நிலைமை.

ஆம் தெற்கில் வெள்ளம்; வடக்கில் வரட்சி இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையில் ஒரு சமத்துவத்தைப் பேண இயற்கைக்கு உடன்பாடு இல்லை.

இங்குதான் இயற்கை எனும் தெய்வத்தை நாம் சரியான முறையில் ஆராதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

நாம் நினைத்தபாட்டில் இயற்கையை வஞ்சிக்க நினைக்கும் போது இயற்கை நம்மை வஞ்சித்து விடுகிறது.

எனவே இயற்கை எனும் இறைவன் கோபமுறாமல் எங்கள் வாழ்வுக்கு தன் வளத்தைத் தர வேண்டும் என மன்றாடுவோம்.

இது ஒருபுறம் இருக்க, தென்பகுதியில் – மலையகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்க அரசாங்கத்துடன் இணைந்து பொது அமைப்புக்களும் பொதுமக்களும் முன்வர வேண்டும்.

இயற்கையின் சீற்றம் ஏற்படுத்திய பேரழிவுகளை ஈடுசெய்வதற்கான அத்தனை நிவாரணப் பணிகளையும் முன்னெடுப்பது அரசாங்கத்தின் தலையாய கடமை.

அதேவேளை இயற்கையின் சீற்றம் ஏற்படும் போதெல்லாம் மக்கள் சமூகத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யப்பட வேண்டும்.

வெள்ளப்பெருக்கில் – மண்சரிவில் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். அனர்த்த முகாமைத்துவம் என்ற விடயம் இங்கு மிகவும் முக்கியமாகிறது.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னதான எச்சரிக்கைகள், மக்களுக்கான பாதுகாப்புக்கள் தொடர்பில் அதீத கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

அதிலும் குறிப்பாக மலையக மக்கள் இயற்கை அனர்த்தத்தால் சதா பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர்.

எனவே அவர்கள் பாதுகாப்பும் பாதுகாப்பான இடங்களில் வாழ்வதும் தொடர்பில் அரசாங்கம் அதீத முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

# தமிழர்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யா தீர்வை நிராகரிப்போம்

## ஈரோஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யா எந்த தீர்வையும் மக்களுடன் இணைந்து ஈரோஸ் அமைப்பும் நிராகரிக்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை என்று ஈரோஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிங்கள மக்களுக்கு சமஷ்டி என்றால் என்ன என்பதை தெளிவாக விளங்கப்படுத்தியிருந்தால் அவர்கள் நிச்சயம் விளங்கிக் கொண்டிருப்பார்கள் என்று ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான ஏ.ஆர். அருட்பிரகாசம் தெரிவித்தார்.

ஈரோஸ் இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

'இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இணைந்த வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு பூரண சுயாட்சி என்பதே தமிழ் மக்களது அபிலாசை என்று குறிப்பிட்ட அவர், இதுவே தமிழ் மக்களுடைய கோரிக்கையாக இருந்து வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இதற்கு குறைவான எந்த தீர்வும் தமிழ் மக்களை திருப்திப்படுத்தாது என்றும் கூறியுள்ளார்.

கடந்த கால அரசியலமைப்புக்கள் தமிழ் மக்களால் எவ்வாறு நிராகரிக்கப்பட்டதோ அதேபோன்று தான் இதுவும் நிராகரிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்த அவர்,

தமிழ் மக்களுடைய தாயக, தன்னாட்சி உரிமையை அங்கீகரித்து உரிய தீர்வைக் கொண்டு வராவிட்டால் அது மக்களால் நிராகரிக்கப்படும் என்றும் அதனை எதிர்த்து போராட வேண்டும் என்று மக்கள் விரும்பினால் ஈரோஸ் அமைப்பும் போராடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (11)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** நெடுந்தீவு பிரதேசம், கொடிகாமம் கச்சாய் வீதி, நெடுந்தீவு தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம் மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, Cey- Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), பனைவள ஆராச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தேக்கவத்தை பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில** உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக்கண்டல், நிலாச்சேனை, வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், கண்ணாட்டி, பரப்புக் கடந்தான் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)




காஷ்யப்பர், பிருகு போன்ற மகரிஷிகள் ஒன்று திரண்டு கங்கையின் கரையில் உலக நன்மைக்கென யாகம் ஒன்றை உற்சாகமாக நடத்திக் கொண்டிருந்தனர்.

வேதகோஷம் விண்ணை நிறைத்து நெய் மணம் நெடுகப் பரவியிருந்தது. பூமியே புனிதமாகிக் கொண்டிருந்த அவ்வேளையில்தான் திட்டமிட்டபடி நாரதர் அங்கு வந்து சேர்ந்தார்.

மகரிஷிகள் மகிழ்வுடன் அவரை வரவேற்றனர்.

"முனிவர்களே... உலக நன்மைக்கென உங்களால் நடத்தப்படும் யாகம். எனக்குப் பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம் என்று தொடங்கி சொல்ல வந்ததைச் சொல்லாமல் நிறுத்தினார் நாரதர். (தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ பொய்ச்சாட்சி, அநீதிக்குத் துணைபோதல் ஆகிய பாவங்களைச் செய்தவர்களை கிங்கிரர்கள் பாறாங்கற்களை எறிந்து வதைத்தல்.

-அவீசி (கருடபுராணம்)

✦ மது, மாமிசம் இவைகளை மற்றவர்களுக்குக் கொடுத்து உண்ணச் செய்பவர்கள் நெருப்பு கம்பங்களை தழுவச் செய்தல்.

பரிபாதனம் (கருடபுராணம்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**ஆர்ஷ விவாகம் என்றால் என்ன?**

ஒன்று அல்லது இரண்டு ஜோடி பசு மற்றும் காளையை ஏற்றுக்கொண்டு விதிப்படி கன்னியை வரனுக்குத் தானம் செய்வது ஆர்ஷ விவாகம் ஆகும்.




**பிரஜாபத்யம் விவாகம் என்றால் என்ன?**

நீங்கள் இருவரும் ஒற்றுமையாக தர்ம முறைப்படி வாழுங்கள் என்று கூறி பூஜித்து கன்னியைத் தானம் செய்வது பிரஜாபத்யம் (தொடரும்)

## விலங்கு விசர்நோய் ஏற்படின் மரணம் நிச்சயம்

கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிறு குழந்தைகள் நாய்க்கடிக்கு உள்ளாகும் போது தொற்றுதலுக்கு ஏதுவான நிலையை கருத்திற்கொண்டு தடுப்பூசி அளிக்கப்படும்.

வளர்ப்பு நாய், நன்றியுள்ள நண்பனாக அமைவான். அவன் நலனிலும் கரிசனை காட்டுங்கள்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ நமது மனஅமைதி மிகுந்து நமது மனதின் சஞ்சலம் குறையும் அளவுக்கு ஏற்ப நமது அன்பு வளரும். நமது செயலும் முன்னைவிடச் சிறக்கும்.


❖ எஜமானைப் போன்று செயல்புரிய வேண்டும். அடிமையைப் போலல்ல இடையறாது செயல்புரிக. ஆனால் அடிமை வேலையைச் செய்யாதே.

❖ நீ பற்றற்றிரு; மற்றவை வேலை செய்யட்டும்; மூளையின் பகுதிகள் வேலைகள் செய்யட்டும்; இடையறாது வேலை செய். ஓர் அலைகூட மனதை வெல்ல இடம் கொடுக்காதே. 'இவ்வுலகிற்கு நீ அந்நியன் போலவும் வேலை செய்; இடையறாது வேலை செய். ஆனால் உன்னை தளைகளுக்கு உள்ளாக்காதே: அது அஞ்சத்தக்கது.

❖ முயற்சியின்மையை எல்லா வழியாலும் நீக்க வேண்டும். முயற்சி என்பது எதிர்த்தல் என்று எப்போதும் பொருள்படும். உள்ளத்தையும் உடலையும் பற்றியவை அனைத்தையும் எதிர்த்து நில். எதிர்ப்பது கைகூடும் போது உனக்கு அமைதியும் உண்டாகும்.

# உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா - 2017




உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா - 2017 கடந்த திங்கிட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் ரி.சிந்துஜனின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் , சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினர்களாக எம்.செல்வஸ்தான் (அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எஸ்.சண்முகவடிவேல் (மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி) ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையோடு அழைத்துவரப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து இறைவணக்கம், கொடியேற்றம், இளைஞர் சத்தியப்பிரமாணம், ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல் என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து பிரதம விருந்தினரால் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. விளையாட்டு நிகழ்வுகளின் இறுதியாக ஞான முருகன் இளைஞர் கழகம் மற்றும் குறிஞ்சிக்குமரன் இளைஞர் கழகம் ஆகிய அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டி நடைபெற்று இறுதியில் ஞான முருகன் இளைஞர் கழகம் வெற்றியீட்டியது.

தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கும், வெற்றியீட்டிய அணியினருக்குமான பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. தொடர்ந்து நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (க)



## கிரிக்கெட்போட்டிக்கு விண்ணப்பிக்குக

புத்தூர் ஸ்ரீகுமரகுருபரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்று போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 7 பேர் 5 பந்துப்பரி மாற்றங்கள் கொண்டதாக போட்டி நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - 05.06.2017 வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பதில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி விண்ணப்பிக்க 077 512 2976, 076 995 4047, 077 371 0157, 077 284 4663. (க)

## சமநிலை தவிர்ப்பு உதையில் நவஜீவன்ஸ் வி.கழகம் வெற்றி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதி போட்டிகள் (2017.05.25) அன்று வல்வை றெயின்போ வி.க. மைதானத்தில் இடம்பெற்றது.

நடைபெற்ற முதலாவது போட்டியில் றேஞ்சஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டியானது 1:1 என்ற நிலையில் முடிவு பெற்றது. சமநிலை தவிர்ப்பு உதைமூலம் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (க)




# பலாலி விண்மீனை வீழ்த்தி கலைமதி அரையிறுதிக்கு தகுதி





வல்வை வி.க நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் (25.05.2017) அன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டு கழகம் மோதியது .

ஆட்டம் தொடங்கி இரு அணிகளும் சிறப்பான முறையில் விளையாடியது முதல் பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் கலைமதி வீரன் வினித் கோல் ஒன்றை போட்டார். முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சளைத்தவர்கள் அல்ல என விளையாடியது. இரு அணிகளும் கோல்கள் ஒன்றும் போடவில்லை. ஆட்ட நேர முடிவில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 1:0 என வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்துடன் எதிர்வரும் 2017.05.28 ஞாயிறு பி.ப 4.00 மணியளவில் மோதவுள்ளது. (க)

## நவிண்டில் வி.கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## அடுத்த சுற்றில் யங்கம்பன்ஸ்

நவிண்டில் வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின்(25.05.2017) அன்று இடம் பெற்ற முதலாவது போட்டியில் கம்பர் மலை யங்கம்பன்ஸ்அணியை எதிர்த்து




சென்.மைக்கல் அணி மோதியது.

முற்பாதியாட்டத்தில் சென். மைக்கல் அணி வீரர் கொமறோ 14வது நிமிடத்தில் கோல் போட்டு 01:0 என்ற கோல் கணக்கில் முற்பாதியாட்டத்தை முன்னிலைப் படுத்தினார்.

பிற்பாதியாட்டத்தின் 28வது நிமிடத்தில் நிறோஜன் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார். அடுத்த 36/37ஆவது நிமிடங்களில் பிரகாஷ் இரண்டு கோல்களை போட்டு அணியின் வெற்றியை உருதிப்படுத்தினார்

இறுதியாட்ட நேர முடிவில் 3:1 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் வெற்றியீட்டி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது. (க)

# பௌத்த இனவாதம்...

மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக தெற்கில் முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் மற்றும் மதஸ்தலங்கள் மீது சிங்கள பேரினவாதிகளால் தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அமைச்சர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையில் ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக நீச்சல் தடாகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அடிக்கல்-நாட்டு விழா நேற்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டிதுறை கடற்கரையில் அமைந்துள்ள சுங்க இலாகாவிற்கு சொந்தமான காணியில் நீச்சல்தடாகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்று அடிக்கல் நாட்டியதன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர், எங்கு தவறிழைத்தோம் என்பதை அறிந்துகொள்வதற்கான தருணம் தற்போது கிடைத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மங்கள சமரவீர நாம் எங்கு தவறிழைத்தோம் என்பதை அறிந்துகொள்வதற்கான தருணம் தற்போது கிடைத்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர் நாம் நாட்டின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு செயற்படவில்லை. தீவிரவாதத்தின் வேறுபட்ட தத்துவங்களின் அடிப்படையில் செயற்பட்டோம்.

வடக்கிலும் தெற்கிலும் எமது இளைஞர்கள் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டார்கள். தெற்கில் இரண்டு கலகங்கள் ஏற்பட்டன. வடக்கில் 30 வருட யுத்தமொன்று ஏற்பட்டது. இறுதியில் அப்பாவி மக்கள் நாடு முழுவதிலும் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே நாட்டில் மீண்டும் சில விடயங்கள் நிகழாமல் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த மாற்றத்தை ஏற்படுத்த நாம் உறுதிபூண்டுள்ளோம்.

ஜனநாயகம் மற்றும் வடக்கு கிழக்கின் துரித அபிவிருத்தி தொடர்பில் நாம் முன்னுரிமை அளித்து செயற்படுகின்றோம். பிரிவினைவாதிகளின் கைகளில் சிக்கிவிட வேண்டாமென நாம் இங்கு உள்ள இளைஞர்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். நாட்டில் மீண்டும் சிங்கள-தமிழ் மற்றும் முஸ்லிம் பிரிவினைவாதம் தலைதூக்க முயற்சிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

எமது புத்தபகவானின் பெயரில் சிங்கள பௌத்த பிரிவினைவாதம் தலைதூக்க முயற்சிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. சிங்கள-தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் மீண்டும் அவநம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வங்குரோத்து நிலையை அடைந்துள்ள அரசியல் சக்திகள் மீண்டும் மக்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

நாம் பிரிவினைவாதிகளை தோற்கடிக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாடு என்ற வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார். (11)

# ஊர்காவற்றுறை...

ண்டியும் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த பதினாறு வயதுடைய சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தான்.

இவ் விபத்து சம்பவத்தையடுத்து அவ் விடத்தில் ஒன்றுகூடிய உயிரிழந்த சிறுவனது உறவினர்கள் மற்றும் அயலவர்கள் குறித்த பேருந்தின் மீது சரமாரியாக தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக பேருந்தின் மீது கற்களை வீசியெறிந்தும் கொட்டன்களால் தாக்கியும் இருந்தனர். இச் சம்பவத்தில் பேருந்தின் சாரதி அவர்களிடமிருந்து தப்பிச் சென்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று குறித்த பேருந்தை அவர்களிடமிருந்து மீட்டெடுத்து சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போது அங்கு தாக்குதலில் ஈடுபட்டிருந்தவர்கள் பொலிஸாருடனும் முரண்பட்டுக்கொண்டனர். இதனால் அவர்களது தாக்குதலுக்கு உள்ளாகி பொலிஸ் வாகன சாரதி ஒருவர் காயமடைந்திருந்தார். இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியாலது கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதனை கவனத்திலெடுத்த நீதிவான் வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவொன்றை பிறப்பித்திருந்தார்.

இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்றுமுன்தினம் இருவரை கைது செய்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். அவ்வாறு முற்படுத்தப்பட்ட இருவரையும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை பதில் நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதனை தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டமை, பொலிஸாரது விசாரணைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியை சேர்ந்த மேலும் பதினான்கு பேர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தியிருந்தனர்.

முற்படுத்தியவர்கள் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் குறித்த பதினான்கு பேரையும் எதிர் வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். (4)

# தவறான சிந்தனை...

நீரிணை வழியாக இந்தியாவின் கோடிக்கரையை கடந்து கின்னஸ் சாதனை படைத்த ஆழிக்குமரன் ஆனந்தனின் நினைவாக யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நீச்சல் தடாகம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது

இந்த நீச்சல் தடாகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இனங்களுக்கு இடையில் காணப்படும் வேற்றுமை உணர்வினை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குமாரசாமி விவேகானந்தனுக்கும் இராஜரத்தினம்மாள் விவேகானந்தனுக்கும் சிரேஷ்ட புதல்வனாக 1943-ம் ஆண்டில் வல்வெட்டித்துறை மாநகரில் அவதரித்த ஆனந்தன் அவர்கள் சிறு வயதில் இருந்தே எந்தவொரு காரியத்தை முன்னெடுத்தாலும் அதில் வெற்றிபெற வேண்டும் அதன் மூலம் சாதனைகள் படைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்டார்.

கின்னஸ் புத்தகத்தில் குறைந்தது பத்து பதிவுகளையாவது உட்புகுத்த வேண்டும் என்பது அவரின் இளவயது கனவாக இருந்தது. இவர் சிறுவயதில் இருந்தே கடலில் நீச்சல் அடிப்பதில் வல்லவராக இருந்தார். அத்துடன் கல்வியிலும் சிறப்புறப்பயின்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் பெற்று அதன்பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்ட இளமாணிப்பட்டம் பெற்று சட்டத்தரணியாக சித்திபெற்று சிறிது காலம் சட்டத்தரணியாக பணியாற்றிய போதும் அத்துறையில் நாட்டம் இல்லாத காரணத்தினால் அதனைக் கைவிட்டுவிட்டு வணிகத்துறையில் கால் பதித்தார்.

1971-ல் வல்வெட்டித்துறையில் இருந்து பாக்கு நீரிணை வழியாக இந்தியாவில் இருக்கும் கோடிக்கரை எனும் ஊரிற்கு அவர்நீந்திக் கரை சேர்ந்தார். இவருக்கு முன் இதே ரேவடி கடற்கரையில் இருந்து 1954-ம் ஆண்டில் அமரர் நவரத்தினசுவாமி அவர்கள் பாக்கு நீரிணையை முதன் முதலாக நீந்திக் கடந்து சாதனை படைத்திருந்தார்.

ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் 20 இற்கும் மேற்பட்ட சாதனைகளை புரிந்த போதும் அவற்றில் 07 சாதனைகள் மட்டுமே கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது. எனினும் முதலாவது சாதனையாக 1963ல் வல்வெட்டித்துறையில் இருந்து கோடிக்கரை வரை நீந்திக்கடந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (4,60)

# கிளியில் வீழ்த்தப்பட்ட...

கிளிநொச்சி நகரில் ஏ9 பிரதான வீதிக்கு அருகில் காணப்படுகின்ற யுத்த காலத்தில் வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியும் இராணுவத்தினரால் எதிர்வரும் 30ஆம் திகதி விடுவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் நாமல் ராஜபக்ஷவினால் பயங்கரவாதத்தின் அழிவை வெளிப்படுத்த வேண்டும் எனக் கூறி வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கி யுத்த அழிவு சின்னமாக பேணப்பட்டு வந்தது. அதனை கிளிநொச்சியில் உள்ள படையினர் பாதுகாத்து வந்தனர். பெருமளவான தென்னிலங்கை சுற்றுலா பயணிகள் வருகைதந்து பார்வையிடுவது வழக்கமாக இருந்தது. அவர்களுக்கு இராணுவத்தினர் வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கி தொடர்பில் விளக்கமளித்து வந்தனர்.

யுத்த காலத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய அழிவுகள் தொடர்பில் காணப்பட்ட பலவற்றை அபிவிருத்தி செய்து அவற்றை இல்லாது செய்து அரசு விடுதலைப் புலிகளினால் வீழ்த்தப்பட்ட நீரத்தாங்கியை மாத்திரம் யுத்த அழிவுச் சின்னமாக பேணியமை தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் இடம்பெற்ற பல கூட்டங்களிலும் இது தொடர்பில் எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி குறித்த நீர்த்தாங்கி உள்ள நாற்பது பேர்ச் காணி இராணுவத்தினரால் கரைச்சி பிரதேச செயலாளரிடம்கையளிக்கப்படவுள்ளது. அதனை பிரதேச செயலகம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையிடம் கையளிக்கவுள்ளது. (312)

# சீரற்ற காலநிலை...

இதேவேளை இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் அதிகமான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

மண்மேட்டுக்குள் சிக்குண்டவர்களை மீட்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

எஹலியகொட அம்ருவகந்த பகுதியில் உள்ள மலையில் ஏற்பட்ட மண்சரிவில் புதையுண்ட ஐந்து வீடுகளில் இருந்த 04 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் மேலும் 10 பேர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலங்களை மீட்கும் பணிகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். போபெத்த பகுதியிலும் நேற்று மாலை மண்சரிவு பதிவாகியுள்ளது. இதில் 04 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. இதில் காணாமற்போயுள்ள மூன்று பேரை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எஹலியகொட தலாவிட்டிய பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி மூன்று பேர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பதுரலிய பெல்லன மாவத்தவத்த டெல்கிட்ட தோட்டத்தில் மண்மேடு ஒன்று சரிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் புதையுண்டன. வீட்டிலிருந்த 11 பேர் மண்மேட்டில் புதையுண்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மண்மேட்டில் சிக்குண்டவர்களில் மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், காணாம்ல் போயுள்ளவரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார், இராணுவம் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். பலத்த மழைக் காரணமாக மதுகம-கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

சபுகஸ்கந்த-ஹேயன்துடுவ பகுதியில் வீடொன்றின் மீது மதில் மற்றும் மண் மேடு சரிந்து வீழ்ந்தமையினால் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை கடும் மழை காரணமாக கேகாலை தெய்யோவிட்ட பகுதி வெள்ளத் தால் மூழ்கியுள்ளது. தெய்யோவிட்ட நகரில் சுமார் 6 அடி உயரம் வரை நீர் நிரம்பியுள்ளதாக தெரியவருகிறது.

களனி ஆறு பெருக்கெடுத்ததை அடுத்து தெய்யோவிட்ட நகர் நீரில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியிலும் அவிசாவளை வீதியிலும் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பித மடைந்துள்ளது.

தெரணியகலை-அவிசாவளை பிரதான வீதி மண்சரிவினால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதான வீதியுடனான போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று அதிகாலை ஹட்டன் ஸ்டெதன் தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் குடியிருப்பு ஒன்று பகுதியவில் சேதமடைந்துள்ளது. இந்த அனர்த்தத்தில் வீட்டில் இருந்த ஐந்து பேரும் பாதிப்புகளுமின்றி உறவினர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு சந்தி பகுதியில் சிறிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

ஆங்காங்கே பிரதான வீதிகளில் மண் சரிவுகள் ஏற்படுவதனால் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பதுளை-கொழும்பு புகையிரத பாதையில் ஹட்டன் மல்லியப்பு பகுதியில் சிறிய மண் சரிவு ஏற்பட்டதனால் காலை 8 மணியளவில நாவலப்பிட்டியிலிருந்து நானுஓயா வரை சென்ற புகையிரதம் தாமதமாகியது.

மேலும் நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் விமலசுரேந்திர நீர்த்தேக்கம் வான்பாய்ந்துள்ளது. லக்ஷபான, கெனியன் நீர்தேக்கங்களில் இரண்டு வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேலும் ஹட்டன் டிக்கோயா ஆற்றில் நீர் பெருக்கெடுத்துள்ளதால் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (11)

# துணைவேந்தர்...

கள் நல்லாட்சி அரசாங்கத்தில் பிச்சை எடுக்கின்றனர். இவ்வாறு இவர்கள் பிச்சை எடுக்கவோ, துரோகிகளாகவோ கூடாது என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அரசுக்கு எதிராக இனவாதம் தூண்டப்படுகின்றது. கடந்த அரசாங்க காலத்தில் பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டனவே தவிர அவை மீளவும் வழங்கப்படவில்லை. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் மக்களின் காணிகளை மீள வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும 3000 ஏக்கர் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரவேற்கத்தக்க செயற்பாடாகும். பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது என்பதற்கிணங்க ஆழிக்குமரனின் சாதனைகள் இன்று நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. நல்லாட்சி அரசாங்கமானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கில் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சர் மேற்கொள்கின்றார்.

வடக்கில் பாடசாலைகள், அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றன. கட்டடங்கள், தளபாடங்கள், இல்லாத நிலையில் பல பாடசாலைகள் உள்ளன. இத்தகைய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உரிய நிதி வழங்கப்படவேண்டும். வெளியுறவு அமைச்சராக மங்கள சமரவீர பதவி வகித்தபோது புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளுடன் நல்லுறவை கொண்டிருந்தார். அதற்காகவும் நாம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். ஆழிக்குமரனைப் போன்ற மண்ணுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர்களின் பட்டியல் இன்னமும் நீளவேண்டும். தமிழ் பேசும் மக்கள் நல்லாட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் நல்லாட்சியை அங்கீகரிக்க வேண்டும். 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே பாதைகள் திறக்கப்பட்டன. கடல், தரை, ஆகாய மார்க்கமான போக்குவரத்துக்கள் தடைபட்டிருந்தமையினால் கடந்த காலத்தில் நாம் உணவின்றித் தவித்தோம். அந்த வேளையில் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் ஒன்றுமே செய்யவில்லை.

அன்றைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஆயுதக்குழுக்கள் தமிழர்களை காட்டிக்கொடுத்த துரோகிகளாக செயற்பட்டனர். ஊடகவியலாளர்கள் உட்பட பலரையும் கொலை செய்ததுடன் கப்பம் பெற்று வந்தனர். இத்தகைய நிலையில் நல்லாட்சி அரசாங்கம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே நல்லாட்சிக்கு தமிழ் பேசும் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்றார். (4)

## பரீட்சைகள் ஒத்தி...

நாளை நடைபெறவிருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் IIIக்கான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த பரீட்சைக்காக நாடுமுழுவதுமிருந்து 93ஆயிரத்து 952 பரீட்சார்த்திகள் தோற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பரீட்சைக்காக நாடு முழுவதிலும் 658 மத்திய நிலையங்களில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஏற்கெனவே இன்றைய தினம் நடைபெறவிருந்த பொது நிர்வாக சேவை பரீட்சையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை கருத்திற்கொண்டு குறித்த பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (11)

## விபத்தில் சிக்கிய...

பணிக்கு சென்ற ஹெலிகொப்டர் ஒன்று காலி, நெழுவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி உடைந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களை மீட்பதற்காக பெல் 212 மற்றும் எம்.ஐ - 17 ஹெலிகொப்டர்கள் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காலி நெலுவ பகுதியில் மீட்பு பணிக்காக சென்றிருந்த எம்ஐ27 ரக ஹெலிகொப்டரில் பயணம் செய்த மீட்பு பணியாளர் ஒருவர் தவறி வெள்ளத்தில் விழுந்துள்ளார். (11)

## இந்தியக் கப்பல்...

இந்த கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

குறித்த கப்பலை தவிர மற்றுமொரு இந்தியக் கப்பல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கபிதாத் அஷோக் ராவோ ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (11)

## உடனடி உதவி...

றுள்ள ஜனாதிபதி, நேற்றுக் காலை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன் ஆகியோரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு உடனடி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை நிதி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் அனர்த்தத்திற்குள்ளான மக்களை மீட்கும் நடவடிக்கைகளுக்கு முப்படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி, இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான நலன்பேணல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்து வருமாறும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

திடீர் என ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தனது கவலையை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கான மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நேற்று இரவு நாடு திரும்பியுள்ளார். (11)

## ஞானசார தேர...

சேனா அமைப்பு ஈடுபட்டு வந்ததுடன், ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் தெருக்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அச்சுறுத்தல் விடுத்தல் விடுத்தமை போன்ற குற்றச்சாட்டுகளினாலேயே அவரை கைது செய்ய பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (11)


## வேலை வாய்ப்புக்கள்

சர்வதேச ரீதியில் பல ஆண்டுகளாக இயங்கிவரும் நிறுவனங்களுடன் தொடர்புடைய எமது "Golden Group" நிறுவனமானது தனது புதிய முயற்சிக்கான புதிய கிளைகளை இலங்கையில் ஸ்தாபிக்க உள்ளது.

01.Distributor 02.Supervisor 03.A.S.M
04.Administrator 05.Store Keeper 06.Manager

இவ்வாறான 6 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கவர்கள்.
- O/L, A/L முடித்தவர்கள் அழையுங்கள்.
- O/L, A/L இல்லாதவர்கள் இருப்பாராயினும் கூட விசேட பயிற்சியுடன் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.
- தங்குமிடம், உணவு ஒழுங்குபடுத்தி தரப்படும்.

தொடர்புகளுக்கு: **Golden Group**
No.129, 2nd Cross Street, Jaffna.
T.P No: 0771882507, 0776219536
(சி-8697)


## மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் (PLC)இல. 21, சேர் றசீக் பரீட் மாவத்தை கொழும்பு-01, அதன் ஸ்ரான்லி வீதிக் கிளை அலுவலகம் இல.62/6 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல: ஈடு /20/2015 எதிர்

01.சண்முகராஜா ஸ்ரீகுமரன்,
02.ஸ்ரீகுமரன் பெண் கோபிகா
இருவரும் "தர்சினி இல்லம்"
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

எதிராளிகள்

2017.04.19 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், கல்வியங்காடு, முக்குறுனிப்பிள்ளையார் கோவிலடி, புலவனார் வீதியில் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2017 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

தீர்வைத் தொகை

எதிராளிகள் வழக்காளிக்கு (ரூ.5,181,044-19) ஐம்பத்தொரு இலட்சத்து எண்பத்தொராயிரத்து நாற்பத்து நான்கு சதம் பத்தொன்பதும் வட்டியும் செலவும் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை:

"பொச்சிவளவும் படத்தல்வளவும் பெரியபிள்ளை வளவும்" நிலப்பரப்பு 1 குளி 13.78 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ஏ.தங்கமயில் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 22.04.2003 திகதிய 35ம் இலக்க நில அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 13 குளி 0.97 இதில் 1ம் துண்டு எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குளி 12.5 தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.நகுலேஸ் 06.12.2005 திகதிய 1356ம் இலக்க நில அளவைப்படத்தின்படி 1ம் துண்டாக சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 ஒன்று குளி பதின்மூன்று தசம் ஏழு எட்டு 13.78 வீடும், கிணறும் மற்றும் அதற்குரியவைகளும் இதற்கெல்லை கிழக்கு: சுப்பையா பெண் செல்லம்மாவின் உரித்தாளரின் ஆதனம், வடக்கு: தம்பையா பெண் பாக்கியத்தின் ஆதனம், மேற்கு: மாணிக்கவாசகப்பிள்ளை கனகசபையின் ஆதனம், தெற்கு: பிரத்தியேக ஒழுங்கை இதடங்கலும்.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்)-1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி
விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்
விற்பனை கமிசன் 2 1/2%
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி

து.சிறீமோகன்,
பதிவாளர்/ பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(9038)


## வேலைவாய்ப்பு

பரீட்சை வினாத்தாள்களை வீட்டில் வைத்து அல்லது பணி இடம் வந்து **PageMaker, CorelDRAW** ரைப்செற்றிங் செய்து தரக்கூடியவர்கள் தேவை.
தயவுசெய்து முன்அனுபவம் உள்ளவர்கள் மட்டும் (நல்லதேர்ச்சி) தொடர்பு கொள்ளவும்

இடம் - யாழ்.அத்தியடி. (9046)

**0765670241**

## கடைக்கட்டிடங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-கண்டி வீதி, பரந்தன்-பரந்தன் முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து 300 யார் தூரத்திற்குள் ஒவ்வொரு கடையும் 15 அடி அகலமும் 50 அடி நீளமும் (கடையின் பின் பக்கத்தில் 15 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட நிலம் உட்பட) கடைக்கட்டிடங்களுடன் கூடிய காணியும், இரண்டு கடைகள் (துலா 12 அடி அகலம் 110 அடி நீளம்) கட்டக்கூடிய காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-மூர்த்தி
**0775272093, 0777572967**
(8701)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1533

Architectural CAD Centre
Personal & Group Classes
**SPEED BATCH IN Auto CAD**
Lecture by:K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D & 3D Drawing)
University of Pertheniya,
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa
Sat.Day Sun Day 0775116320

## MG பாம் - உடன் தேவை

01. ஊர்ச்சேவல்
02. வான் கோழி
03. புரோயிலர் கோழிகள்



T.P: 077 264 3290
உடுப்பிட்டி
(சி-8682)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
**070 330 5500**
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8652)

## O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!

100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & **Hotel Management** 9ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஜூன் 6 செவ்வாய் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.
(சி-8669)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.